[illegible]

[illegible]

මාර්තු 1949

RM 21192, N47
N48.2.5
199834

588 ஹிந்துபாலஷிணி

ஸர்வதாரி மாசி — 2-5 மார்ச். 1949

"காற்றினிலே வரும் கீதம்"?

ஆனல்!! ஆம்! ?????

அக்காற்றினிலே
செவிக்கெட்டாத கீதமும் உண்டு.
மெல்லிய காற்றினிலே
பல்லாயிரம் காதங்கள் மிதந்து வரும்
இன்னிசை அமுதங்கள்!
அவ்வப்போதைய செய்திகள்!!
அறிவு நிறைந்த பேச்சுகள்!!!
அனைத்தையும் கேட்டு மகிழ சிறந்த சாதனம்

எக்கோ ரேடியோ

தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி
தாலுக்காக்களுக்கு, அதிகாரம் பெற்ற பிரத்யேக
எக்கோ டீலர்கள்
சிந்தாமணி ரேடியோ ஹவுஸ்,
மணிக்கூண்டு எதிரில், தஞ்சாவூர்.

ஸ்ரீ
ராஜாவையாவின்
லிவர் ரெமடி

ஈரல் குலைக்கட்டிக்கு சீக்கிரம் குணமளிக்கிறது.
15 நாள் மருந்து ரூ. 1—8—0

Dr. L. ராஜாவையா & பிரதர்,
Gold Medalist & Liver Specialist.
சோமேச்வர வைத்தியசாலை,
3-ம் தெரு, மன்னார்குடி.

குழந்தைகளை பரீக்ஷிக்கும் நேரம்:-
காலை 8 மணி முதல் 10 மணி வரையில்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - MAR 1949
MADRAS

|| ஸ்ரீ: ||

"ஹிந்துபாஷிணி"

பொருளடக்கம்.

ஸர்வதாரி ௵ மாசி௴

1 ஸர்வம் ஸந்தேஹமயம் 1
2 ஹிந்துகோட் திருத்த மசோதா. 4
3 ப்ராதஸ்மரணீய சுலோகங்கள். 10
4 ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்திரம் 13
5 ஷட்பதீ ஸ்தோத்திரம். 17
6 விதுர நீதி. 21
7 ஷண்ணவதி சிராத்தமும், அதன் காலமும் 24
8 விபூதியின் விளைவு. 27
9 வட்டுச் சுரைக்காய். 31
10 ஸ்ரீவேதாந்த தேசிகர் ஸுபாஷிதங்கள். 35

தொகுதி 2 | ஸர்வதாரி ௵ மாசி௴ 1949 மார்ச்சு | பகுதி 5

ஸர்வம் ஸந்தேஹமயம்.

நமது சென்னை தேசிய சர்க்கார் ஹிந்துமத தர்ம ஸ்தாபன மசோதா ஒன்றை தயார் செய்து அதை செலக்ட் கமிட்டியின் பரிசிலனைக்கு அனுப்புவதாகத்தீர்மானித்திருக்கிறார்கள். கோவில்களுடையவும், மடங்களுடையவும் சொத்து துர்விநியோகப்படுத்தப்படுவதாலும், நிர்வாகத்தில் பல ஊழல்கள் இருப்பதாலும், அவற்றையெல்லாம் தேசிய சர்க்கார் அனுமதிக்கமுடியாதாகையாலும், அவற்றை கட்டுப்படுத்த மேற்படி நிர்வாகங்களை சர்க்காரே ஏற்றுக்கொள்ள இம்மசோதா அனுமதி கோருகிறது. இதைப்பற்றி விரிவான சர்ச்சை நடந்தபிறகு மசோதாவை செலக்ட்கமிட்டிக்கு அனுப்ப சட்டசபை அனுமதித்திருக்கிறது. இம்மசோதாவைப்பற்றி காங்கிரஸ் அங்கத்தினர்களுக்குள்ளேயே அபிப்ராய பேதம் இருக்கிறது. சட்டசபையில் இதை ஆதரித்துப்பேசினவர்களை விட எதிர்த்துப்பேசியவர்களே அதிகம். ஆதரித்தவர்களும், எதிர்த்தவர்களும் ஒரு விஷயத்தை ஏகமனதாக அங்கீகரிக்கிறார்கள். அதாவது, சில மடங்களிலும், கோயில்களிலும், ஊழல்களும் துர்விநியோகங்களும் இருக்கின்றன. அதற்கு பரிஹாரம தேடவேண்டியது அவசியம் தான் என்று அதற்காக இம்மாதிரிமசோதாவை இப்பொழுதுசட்டமாக்குவதுநியாயமா?

என்ற விஷயம் பற்றி சர்ச்சை நடந்திருக்கிறது. பல சீர்திருத்தங்களை முன்னணியில் நின்று ஆதரித்து நிறைவேற்றிய பிரபல காங்கிரஸ் வாதிகளே இந்த மசோதாவைப் பலமாகத் தாக்குகின்றனர். மேற்படி சட்டசபை நடைவடிக்கைகளையும், பிரசித்திபெற்ற தேசீய பத்திரிகைகளின் தலையங்கங்களையும், சட்ட நிபுணர்களுடைய அறிக்கைகளையும் ஊன்றிகவனித்தால் இம்மசோதா சம்பந்தப்பட்ட ஸமஸ்தாம்சங்களும் ஸந்தேஹத்திற்கு ஆஸ்பதமாகவே இருக்கின்றன.

அதாவது இம்மசோதா எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் இம்மாதிரி மசோதாவால் கைகூடுமா? என்பது முதல் ஸந்தேஹம். "ஸ்வயம் தரிது மசக்த: கதமன்யான் தாரயேத்" அதாவது பூர்ண பிரவாகமுள்ள ஓர் ஆற்றில் இறங்கி அக்கரைக்கு போகமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஒருவன் மற்றவனை எப்படி கரையேற்றுவான்" என ஓர் கவி கூறியுள்ளார். இதை மனதில் வைத்துக் கொண்டு சிலர் ஆக்ஷேபத்தைகிளப்பி இருக்கின்றனர்கள்.

மதப்பற்றற்ற சர்க்கார் எனத் தீர்ந்தபிறகு இம்மாதிரிச் சட்டம் செல்லுமா? என்பது இரண்டாவது ஸந்தேஹம். பிரபல சட்டநிபுணர்கள் நிச்சியமாகச்செல்லாது எனக்கூறுகிறார்கள். "நிச்சயமாகச்செல்லும்" எனக்கூறி அதற்குச்சான்றாக அட்வகேட் ஜெனராலுடைய அபிப்ராயத்தை சர்க்கார் எடுத்துக்காண்பிக்கிறார்கள். அந்தஅபிப்ராயத்தைக்குறித்து அட்வகேட் K. பால சுப்பிரமணிய அய்யர் அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையைப்படித்தால் மறுபடியும் அதைப்பற்றிய ஸந்தேஹம் ஏற்படுகிறது. இந்த சட்டம் இவ்விதமே நிறைவேறினால் கோர்ட்டு மூலம் இது ஆக்ஷேபிக்கப்படலாம் எனத்திட்டமாக "ஹிந்து" எச்சரிக்கை செய்திருக்கிறது.

இதற்கு பொதுஜன ஆதரவும், பத்திரிகைகளின் ஆதரவும் இருக்கிறதா? என மூன்றாவது ஸந்தேஹம். "ஹிந்து" "சுதேசமித்திரன்" முதலிய பிரபல தேசீய பத்திரிகைளின் தலையங்கங்களிலிருந்தும், ஆங்காங்கு நடக்கும் கண்டனக்கூட்டங்களிலிருந்தும், அறிஞர்கள் அறிக்கைமேல் அறிக்கையாக விடுவதிலிருந்தும் அது இல்லையென்றே தோன்றுகிறது.

சட்டசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியின் ஆதரவாவது இருக்கிறதா? என்பது நான்காவது ஸந்தேஹம். கட்சிக்கூட்டத்தின் நடவடிக்கைகளிலிருந்தும், கொறடா மெம்பர்களுக்குப்பிறப்பித்த உத்திர

199834
RM3118:N42 H4802.5

விலிருந்தும் இவ்வித ஸந்தேஹத்திற்கு இடமில்லை எனக்கூற முடியாது.

இம்மசோதாவால்ஹிந்துமதம் வளருமா? அல்லது அழியுமா? என்பது ஐந்தாவது ஸந்தேஹம். மதத்தை வளர்ப்பதே சர்க்காரின் நோக்கம் எனக் கூறப்படுகிறது. அதை நாம் பூர்ணமாக நம்புகிறோம். ஆனால் அவ்வித நல்லெண்ணம் சட்டத்தின் ஷரத்துகளில் பூர்ணமாக பிரதிபலிக்கிறதா என்றுதான் ஸந்தேகம். வியக்தமான பாஷையில் உறுதியாக அவ்விஷயம் வெளியிடப் பட்டிருந்தால் இவ்வளவுதூரம் சர்ச்சைக்கே இடமிராது. சென்னை பிரமுகர்கள் நமது பிரதமரிடம் ஸமர்பித்த ஒருயாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கும் சில அம்சங்களை கவனித்தால் கூடிய சீக்கிரம் பல தர்மஸ்தாபனங்கள் அழியக்கூடுமென்றே எண்ணவேண்டியிருக்கிறது. அவை யாவன; "1,6,7, வது ஷரத்துக்களில் மூலம் மடாதிபதிக்குமேல் சர்க்கார் பெரிய அதிகார முள்ளவராக்கப் பட்டிருக்கின்றனர்.

2 85-வது பிரிவுமூலம் மடாதிபதிக்கும், சர்க்காருக்கும் அதன் உத்யோகஸ்தர்களுக்கு மிடையில் அபிப்ராய பேதமேற்படும் விஷயங்களில் மடாதிபதிக்குப் பரிகாரமளிக்க கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை.

3 கமிஷனர், டிப்டிகமிஷனர், உதவிகமிஷனர், இவர்களோ அன்றி அதிகாரம் பெற்ற வேறு எவரோ மடாதிபதிகளுக்குப் பிறப்பிக்கும் உத்திரவை மடாதிபதி பதில் பேசாமல் கீழ்படிந்து நடக்கவேண்டும்.

4 கோர்ட்டுக்கு போகும் உரிமை அளிக்காமலே சர்க்கார் மத விஷயங்களை நிர்ணயித்துக் கட்டுப்படுத்துவர்.

5 சட்டப்படியுள்ள அதிகாரத்தை அல்லது கடமையை நிறைவேற்றுவதற்காக கமிஷனரால் அதிகார மளிக்கப்பட்ட எவரும் எந்த புனிதமான தொழுமிடத்திற்கும் போகலாம் என 16-வது பிரிவு கூறுகிறது".

இவ்வளவு சந்தேகங்களுக்கு இடமான ஒரு மசோதாவை கட்சி பலத்தால் மட்டும் நிறைவேற்றுவது என்பது தேசிய சர்க்காருக்கு அழகல்ல. முக்யமாகவுள்ள சில மடாதிபதிகளையும் தேவஸ்தான நிர்வாஹிகளையுமாவது இவ்விஷயமாக கலந்து ஆலோசிக்க வேண்டும். அவர்கள் எந்தெந்த விஷயங்களில் எம்மாதிரி சர்க்கார் தலையிடலாம் என்பதை எடுத்துரைத்து இவ் விஷயத்தில் உதவி புரிவார்கள். இவற்றை யெல்லாம் செய்யாமல் அவசரப்பட்டு பல சந்தேகங்களுக்கு ஆஸ்பதமான மசோதாவை

நிறைவேற்றுவது பல அனர்த்தங்களையே உண்டுபண்ணக்கூடும்.

"க: சக்த: ஸம்சயம் கார்யம் குர்யாத் ப்ராஜ்ஞ: ஸஸம்சயம்"

பல சந்தேகங்களுக்கு ஆஸ்பதமான கார்யத்தை தங்கு தடையின்றி எந்த அறிவாளியும் செய்யமாட்டான் என்றார் மந்திரிகளுள் சிறந்த ஹனுமான்.

ஹிந்து கோட் திருத்தமசோதா.

(காசி ஸ்ரீ கரபாத்ரஸ்வாமிஜி மஹராஜ் அவர்களின் உபன்யாச சாரம்.)

6-2-49 ஞாயிற்றுக்கிழமை மாலை தஞ்சை மேலவீதி ஸ்ரீ சங்கரமடத்தில் ஹிந்துகோட் திருத்தமசோதாவை கண்டனம் செய்ய ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் ஏராள ஸ்திரீபுருஷர்கள் விஜயம்செய்து மேற்படி மசோதாவை பலமாக கண்டிப்பதாக ஓர் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினார்கள். அப்பொழுது காசிமுதல் கன்யாகுமரி வரை ஆங்காங்கு சுற்றுப்பிரயாணம் செய்து இடைவிடாமல் தர்மப்பிரசாரம் செய்துகொண்டிருக்கும் காசி ஸ்ரீ கரபாத்ரஸ்வாமிஜி அவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் அரியதோர் உபன்யாசம் செய்தார்கள். ஸ்ரீ ஜகதீச்வர சாஸ்திரிகள் தமிழில் மொழிபெயர்த்தார். அதில் மேற்படி மசோதா எவ்வகையில் ஹிந்து தர்மத்தை அடியோடு அழிக்கும் என்பதை வியக்தமாக எடுத்துரைத்ததுடன் பல சாஸ்திரார்த்த நுட்பங்களையும் விளக்கினர். அதன் சாரம் பின்வருமாறு:-

நமது ஹிந்துமதம் அனாதி. அதைப்போதிக்கும் நூல் வேதம். அதுவும் அனாதி; அதைஎடுத்துரைத்த ஈசனும் அனாதி. கிருஸ்தவர்களும், முகம்மதியர்களும் அவர்களுடைய மதத்தை அறிய, பைபிளையும், குருனையும் பின்பற்றுவதுபோல் நமது அனாதி ஹிந்துமதத்தை அனாதியாகிற வேதங்களும், வேதத்தைத்தழுவிய ஸ்மிருதி, இதிஹாச புராணங்களும் கூறுகிறபடியே ஏற்க வேண்டுமல்லாமல் நம்மனப்போனபடி யெல்லாம் அதை மாற்றக்கூடாது. முகம்மதியர்களுடைய அரசாட்சி காலத்திலும் ஆங்கிலேயர்களுடைய அரசாட்சி காலத்திலும் நமது ஹிந்து சட்டத்தை மிதாக்ஷரி, யாஜ்ஞ்யவல்க்யஸ்மிருதி வீரமித்ரோதயம், மனுஸ்மிருதி முதலிய கிரந்தங்களை ஆதாரமாகக் கொண்டே இயற்றியிருந்தார்கள். தற்காலம் அவற்றிற்கெல்லாம் முறண்பாடாக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நமது காங்கிரஸ் அரசாங்கமும் அதற்கு உதவியாகவே இருக்கிறது. நமது தேசத்தலைவர்களுடைய அரிய சேவையாலும்,

பெரிய தியாகத்தாலும் நமக்கு சுயராஜ்யம் கிடைத்திருக்கின்றது என்பது உண்மைதான். அவ்விஷயத்தில் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டியதுதான். அதற்காக ஹிந்து தர்ம விஷயத்தில் அவர்கள் கூறுவதையெல்லாம் நாம் ஏற்கமுடியாது.

தர்மாதர்மம் நமது சிற்றறிவுக்கெட்டாது.

"இம்மசோவிலுள்ள சில ஷரத்துக்கள் சாஸ்திரங்களுக்கு விரோதமாயிருந்தாலும், தற்காலம் நமது புத்திக்குச்சரி என்று தோன்றுவதால் அவற்றை ஏற்கவேண்டியதுதான்." என சீர்திருத்தக்காரர்கள் வாதிக்கின்றார்கள். இது முற்றிலும் தவறு. கண், காது, மூக்கு முதலிய ஞானேந்திரியங்களை, பிரமாணங்கள் என்பர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அறிவை உண்டுபண்ணுகிறது. காது சப்தத்தை அறிகிறது, கண் ரூபத்தைப் பார்க்கிறது கண் சப்தத்தைக் கேட்காது, காது ரூபத்தைப்பார்க்காது. புத்தி ரூபத்தையும் சப்தத்தையும் அறியவேண்டுமானால் கண்ணினுடையவும், காதினுடையவும் உதவியை நாடவேண்டியிருக்கிறது. இவ்விதம், சப்தம், ஸ்பர்சம் ரூபம் முதலியவற்றை அறிவதற்கே புத்தி, கண், காது, முதலிய பிரமாணங்களின் உதவியை நாடவேண்டியிருக்கிறதென்றால். தர்மா தர்மங்களை மட்டும் புத்தி ஸ்வயம் எவ்விதம் அறியமுடியும்? மேலும் ஒருபெண் கணவனுக்கு அடங்கி அவனை அநுசரித்து இருக்கும்வரையில் தான் அவளுக்கு மதிப்பு. கனவனை அநுசரிக்காமல் அவள் இஷ்டப்படி திரிய ஆரம்பித்துவிட்டால் அவளை "அவிசாரி" என்று திட்டுவார்கள். அதுபோல் புத்தியாகிற பெண் பிரமாணமாகிற சாஸ்திரம் என்ற கணவனை அநுசரிக்கும் வரையில்தான் அதற்கு மதிப்பு. சாஸ்திரத்தை மீறினால் அது அவிசாரிக்குச்சமந்தான். ஆதலால்தான் "எல்லோராலும் போற்றப்படும் கீதைக்குக்கூட ஸ்ரீ கிருஷ்ணன் அருளிச்செய்தது என்பதற்காக கௌரவமல்ல பின்பு எதற்காக? வேதத்தில் கூறியவற்றை எல்லாம் எடுத்துரைக்கின்றது என்பதற்காக" என்று நமது கொள்கை. ஸ்ரீ கிருஷ்ணன் கூறியதால் கீதை பிரமாணம் என்றால், புத்தர் கூறியதால் பௌத்த சாஸ்திரமும், கிருஸ்து கூறியதால் பைபிளும் ஏன் பிரமாணமாக ஆகக்கூடாது? என்று கேட்கலாம்.

வேதமும் ஈச்வரனும்

நமது மதத்தில் வேதம் அபௌருஷேயம். அதாவது புருஷனால் இயற்றப்பட்டதல்ல. புருஷனால் இயற்றப்பட்டிருந்தால்

பெரும்பாலும் புருஷனுக்கு, பிரமம், தவறுதல், அறியாமை, பிறரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் எல்லாம் இயற்கையானதால் வேதத்தை பிரமாண கிரந்தமாக ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கலாம். ஈச்வரனிடமிருந்து வேதம் வெளியானது என்றே நமது கொள்கை. "அது அப்படியல்ல, ஏதோ சில புருஷர்கள்தான் இயற்றி இருக்கிறார்கள்" என்று நிச்சயமாக யாராலும் வாதிக்க முடியாது. அது தனிவிஷயமானதால் அதை இங்கு விவரிக்கவில்லை. அந்த வேதம் ஈச்வரனுடைய மூச்சுக் காற்று எனக்கூறப் பட்டிருக்கிறது. ஒருவன் மூச்சைவிடுவதற்கு எவ்விதபிரயத்னமுமோ அல்லது ஆழ்ந்தஆலோசனையோ ஒன்றும் செய்வதில்லை. அதுபோல் ஈச்வரன் தீர்க்காலோசனை செய்து தன் புத்தியால் கற்பித்து வேதத்தை வெளியிடவில்லை. ஆதலால் வேதம் கூறுவது பொய் என்று கூறுவதற்கு யாதொருகாரணமுமில்லாததால் அதில் கூறப்பட்டவையெல்லாம் ஸத்யம். தர்மாதர்மஸ்வரூபத்தை வேதந்தான் எடுத்துக்காட்ட முடியும்.

ஹிந்து கோட்திருத்த மசோதாவால் விளையக்கூடிய தீங்குகள்.

இந்த மசோதாவில் விவாஹரத்து (Divorce) ஸ்திரீகளுக்கு சொத்துரிமை, ஸகோத்ர விவாஹம், முதலிய சாஸ்திர விரோதமான அம்சங்கள் அடங்கியுள்ளன. இவற்றால் தர்மத்திற்கு ஹானி என்பது ஓர்புறமிருக்க நமதுசமூகவாழ்க்கைக்கு ஏற்படும் தீங்குகளும் பல.

விவாஹரத்து:- விவாஹரத்தால் பதிவ்ரதா தர்மத்திற்கு பெயர்போன நம்நாட்டுப் பெண்மணிகளிடமிருந்து மேற்படி தர்மம்விரைவில் விலகக்கூடும். பெண்களின் நன்மைக்காக என்று கூறப்படும் இந்த விவாஹரத்து அவர்களுக்குத் தீமைகளையே உண்டுபண்ணும். தற்காலம் ஆங்காங்கு தர்மம் கொஞ்சம் தலைதூக்கி நிற்கின்றதென்றால் அதற்கு நம்நாட்டு ஸ்திரீகளே முக்கிய காரணம். இந்த மசோதாவால் அவர்களும் கெட்டு அவர்களால் போஷிக்கப்பட்டு வரும் தர்மமும் நாசமடையும் "இந்த புருஷன் தேவையில்லை" என்று வெட்கத்தை விட்டு விவாஹரத்து கோரி கோர்ட்டில் மனுப்போடும் ஸ்திரீகள் நம்நாட்டில் அதிக மிருக்கமாட்டார்கள். ஆனால் "ஸ்திரீகளுக்கு வயதாகிவிட்டது, நமக்கு இனி உபயோகமில்லை" என்ற காரணத்தையோ, "இவள் அழகாக இல்லை" என்ற காரணத்தையோ மனதில் வைத்துக்கொண்டு வெளியில் ஏதாவது ஒரு காரணத்தைக்காட்டி புருஷர்களே அதிகமாக மனுப்போட முன்வருவார்கள் என்பது எனது நம்பிக்கை.

அப்படியானால் ஸ்திரீகளுக்கே அதனால் அதிக திண்டாட்டம். புருஷர்களுக்கல்ல. ஆகையால் இந்த மசோதா ஸ்திரீகளுக்கு ஸாதகமா? பாதகமா?

ஸ்திரீகளுக்கு சொத்துரிமை:- தகப்பன் சொத்தில் பிள்ளைகளைப்போல் பெண்களுக்கும் பாகமுண்டு என இந்த ஷரத்துக்கூறுகிறது. நாளதுவரை நம்நாட்டில், தகப்பன் சொத்தைத் தேடிவைத்திருந்தாலும் சரி இல்லாதபோனாலும் சரி, ஸகோதரிகளுக்கு விவாஹம் செய்துவைக்க வேண்டியது நமது முக்கிய கடமை" என ஸஹோதரர்கள் கருதி வந்திருக்கிறார்கள். பலவேளை சகோதரர்கள் தன்மனைவியின் ஆடைஆபரணங்களைக்கூட விற்றோ அல்லது கடன் வாங்கியோ சகோதரிக்கு விவாஹம் செய்து வந்திருக்கிறார்கள். இனி சகோதரியின் விவாஹத்திற்காக மனைவியிடம், நகை முதலியவற்றைக் கேட்டால், அவள் "என் சொந்த சொத்தை தங்கள் சகோதரி விவாஹத்திற்கென கொடுக்க முடியாது" எனக்கூறலாம். கொஞ்சம் நிர்பந்தப்படுத்தினால் "விவாஹரத்து செய்வேன்" என்று பயமுறுத்தலாம். எனவே இம்மசோதா குடும்பவாழ்க்கையில் கலகத்தை விருத்திபண்ணக்கூடும். மேலும் தகப்பன் சொத்தில் பெண்ணுக்கு பாகமுண்டென்றால் தகப்பன் பட்ட கடனில் அவளுக்கு பாகமுண்டா? இல்லையா? நியாயப்படி உண்டென்றே சொல்லவேண்டும். அப்படியானால் கடன் காரியானபெண்ணை யார் கல்யாணம் செய்து கொள்வார்கள்? அத்தகையபெண்ணை கல்யாணம் செய்து கொண்டால் அவள் கடனை கொடுக்கவேண்டிய பாரமல்லவோ மணமகனுக்குச்சுமரும்.

ஓரே வீட்டில் பாகிஸ்தானும் ஹிந்துஸ்தானும்

விபாகமான சகோதரி விவாஹமானபிறகு கட்டாயம் தன் புருஷன் வீட்டிற்குச் சென்றே தீரவேண்டும். ஒரு வீட்டில் பாதி வீடு அவள் பாகத்திற்கென்று ஏற்பட்டால் அந்த வீட்டை விற்று பணத்தைக் கையில் கொண்டுபோக வேண்டுமென்று நினைப்பதே இயற்கை. விற்குங்காலத்தில் யார் அதிகமாக பணங்கொடுக்கின்றார்களோ அவர்களிடந்தான் விற்பார்கள். ஒருக்கால் முஹம்மதியர்கள் அதிகப்பணம் கொடுத்தால் அவர்களிடம் விற்பதற்குத் தயங்கமாட்டார்கள். அப்படியானால் ஒரு வீட்டிற்குள்ளேயே பாகிஸ்தானும் ஹிந்துஸ்தானும் ஏற்படலாம். விபாகமான சகோதரர்கள் எல்லோரும் வீட்டை விற்றே ஆகவேண்டுமென்ற முறையில்லாததால் இம்மாதிரி ஸம்பவங்கள் அவர்கள் விஷயத்தில் அதிகமாக இரா.

ஸகோத்ர விவாஹம்:- ஸகோத்ர விவாஹத்தை அநுமதிப்பவர்களே, பெண்ணை தகப்பன் விவாஹம் செய்துகொள்வதையும், ஸஹோதரியை ஸஹோதரன் விவாஹம் செய்துகொள்வதையும் அநுமதிக்க வில்லை? ஏன்? பாபமா? அந்தப்பாபம் கருப்பாக இருக்குமா? சிவப்பாக இருக்குமா? ஸகோத்ர விவாஹத்தில் பாபம் ஒன்றுமில்லை யென்றால் ஸஹோதரி விவாஹத்தில் மட்டும் பாபம் என்பது எப்படி ஸம்பவிக்கும்? ஆகவே இவ்வாதத்தில் கொஞ்சங்கூட நியாயமிருப்பதாகத் தோன்றவில்லை.

மதசார்பற்ற சர்க்கார்:- தற்கால சர்க்கார் மதசார்பற்ற சர்க்கார் (Secular State) எனக்கூறப்படுகிறது. ரொம்பவும்சரி அதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அதன் பொருள் என்ன? என்பதை ஆராயவேண்டும். அரசாட்சி புரிகின்றவரோ அல்லது குடிகளோ மதப்பற்றற்றவர்களாகவே இருக்க வேண்டுமென்று அதன் அர்த்தமா? அப்படியானால் "நமது ராஜ்யத்தை விரைவில் இராமராஜ்யமாக ஆக்குவோம்" என்ற சொல் அர்த்தமற்றது. குடிகளுக்கும், அரசாட்சி புரிகின்றவர்களுக்கு மதப்பற்று கூடாது என்றால் அது நாஸ்திக ராஜ்யமாகுமல்லாமல், இராமராஜ்யமாகஆகுமா? ஆதலால் 'அரசாட்சி புரிகின்றவர்கள் எந்தமதத்தைச் சேர்ந்தவர்களோ அந்த மதத்திற்கு விசேஷசலுகை காட்டி பிறமதத்தைத் தூற்றாமல் நடுநிலைமை வகிக்கும் சர்க்கார்" என்றுதான் இந்தச்சொல்லின் அர்த்தமாக இருக்கவேண்டும் அப்படி இருந்தால் நமக்கு எவ்வித ஆட்சேப முமில்லை. இவ்விதம் பெயரை வைத்துக்கொண்டு ஹிந்து மதத்தில் கையைவைப்பது ஏன்?

ஹிந்து என்றால் யார்?

இம்மசோதாவில் "ஹிந்து என்ற பதத்திற்கு இலக்கணம் கூறியிருப்பது மிகவும் விந்தையாக இருக்கிறது. "யார் தம்மை ஹிந்து எனக்கூறிக் கொள்ளுகிறார்களோ அவர்கள் எல்லோரும் ஹிந்துக்கள்" என இம்மசோதாவில் காணப்படுகிறது. இப்படிக் கூறுவதால் ஹிந்துக்களின் ஜனத்தொகை விருத்தியடையலாம். ஆனால் முகம்மதியர்களோ, ஐரோப்பியர்களோ தம்மை ஹிந்து எனக்கூறிக்கொண்டு நம்முடன் விவாஹம் முதலிய சம்பந்தங்களை வைத்துக்கொள்ளலாம். ஆதலால் இம்மாதிரி இலக்கணத்தையும் நாம் ஏற்கமுடியாது.

இவ்விதம், இம்மசோதா சாஸ்திர விருத்தமாக இருக்கின்றதுமட்டுமல்லாமல், நமது சமுதாய வாழ்க்கையையே அடியோடு அழிக்கக்கூடியதாகவும், "மதப்பற்றற்ற சர்க்கார்" என

சர்க்கார் சொல்லிக்கொள்ளுவதற்கும் முரண்பாடாக இருப்பதால் இதை ஹிந்துக்கள் அனைவரும் எதிர்த்தே தீரவேண்டும். கிராமஜனங்களிலுள்ள ஹிந்துக்களிடம் இவ்விஷயத்தை வியக்தமாகத் தெரிவித்து அவர்களுடைய எதிர்ப்பையும் டில்லி சர்க்காருக்கு தெரிவிக்கும்படி செய்யவேண்டும். நம்முடைய ஆட்சேபத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய ஸர்வேச்வரனை நாம் அனைவரும் பிரார்த்திக்கவேண்டும். அதற்காக ஆங்காங்கு "தர்மஸங்கம்" என்று ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டியது அவசியம் எனக்கூறிமுடித்ததும், தர்மஸங்கத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று தஞ்சையில் நிறுவப்பட்டது. கடைசியில் ஸ்வாமிஜியின் உத்திரவுப்படி அடியிற்கண்ட பிரார்த்தனையை ஸ்திரீ புருஷர்கள் அனைவரும் செய்தார்கள்

தர்மஸ்ய ஜயோஸ்து. அதர்மஸ்ய நாசோஸ்து. ப்ராணிஷு ஸத்பாவநாஸ்து விச்வஸ்யகல்யாணமஸ்து.

ஜய ஜய ராம். ஜய ஜயராம், ஜய ஜயராம்.

(குறிப்பு) இக்கூட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஸமஸ்த வசதிகளையும் செய்துகொடுத்த தார்மிக பிரபு ஸ்ரீ ரத்னமய்யரவர்களிடம் ஹிந்துமகாஜனங்கள் அனைவரும் நன்றியுடனிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மதிப்புரை.

குங்குமம்

(மாதவெளியீடு) ஆசிரியை; எஸ். விசாலாக்ஷி

(பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு, சென்னை 10. விலை அணா 8)

இதில் தாலாட்டுதத்வம், குடும்பவாழ்க்கை, திருந்திய நாட்டுப்பெண், பெண்கள் பார்லிமெண்டு, ஸ்ரீ நாராயணதீர்த்த யதீந்திரர் முதலிய பல அரிய ரசமான கட்டுரைகள் அடங்கியுள்ளன. பெரும்பாலும் பெண்மணிகளே இதில் கட்டுரைகளை எழுதிவருவது ஓர் முக்கிய விசேஷம்.

விடியற்காலத்திலெழுந்தவுடன் சொல்ல வேண்டிய ஸ்தோத்ரங்கள்.

(ப்ராதஸ்மரணீய சுலோகங்கள்.)

இப்பகுதி, அனைவரும் மனப்பாடம் செய்யவேண்டிய ஸ்தோத்ரங்களுக்குகென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் வெளியாகும் ஸ்தோத்திரங்களை அடுத்த இதழ் வெளியாவதற்குமுன் சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாயம் மனப்பாடம் செய்து வைக்க வேணுமாய் கோரப்படுகிறார்கள்.

ब्रह्मा मुरारिस्त्रिपुरान्तकश्च
भानुः शशी भूमिसुतो बुधश्च ।
गुरुश्च शुक्रश्शनिराहुकेतवः
कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥ (1)

ப்ரஹ்மா முராரிஸ்த்ரிபுராந்தக:ச
பாநு: சசீ பூமிஸுதோ புத: ச ।
குரு: ச சுக்ர: ச்னிராஹு கேதவ:
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம் ॥

பிர்மா, விஷ்ணு, பரமசிவன், சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது, இவர்கள் எல்லோரும் நமக்கு நற்பொழுது விடியும்படி செய்யட்டும். 1

भृगुर्वसिष्ठः क्रतुरङ्गिराश्च
मनुः पुलस्त्यः पुलहश्च गौतमः ।
दाल्भ्यो मरीचिश्च्यवनोथ दक्षः
कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥ (2)

ப்ருகுர்வஸிஷ்ட: க்ரதுரங்கிரா: ச
மநு: புலஸ்த்ய: புலஹ: ச கௌதம: ।
தால்ப்யோ மரீசி: ச்யவநோத தக்ஷ:
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம் ॥

பிருகு, வசிஷ்டர், க்ருது, அங்கிரஸ், மநு புலஸ்த்யர், புலஹர் கௌதமர், தால்ப்யர், மரீசி, ச்யவநர், தக்ஷர், இவர்கள் எல்லோரும் நமக்கு நற்பொழுது விடியும்படி செய்யட்டும். 2

सनत्कुमारश्च सनन्दनश्च
सनातनोप्यासुरिसिंहलौ च ।
सप्तस्वराः सप्तरसातलानि
कुर्वंतुसर्वे मम सुप्रभात ॥ (3)

ஸநத்குமார: ச ஸநந்தந: ச
ஸநாதநோ ப்யாஸுரி ஸிம்மலௌச ।
ஸப்த ஸ்வரா: ஸப்த ரஸாதலாநி
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம். ॥

ஸநத்குமாரர், ஸநந்தநர், ஸநாதநர், ஆஸுரி, ஸிம்மலர், ஸப்த ஸ்வரங்கள், ஸப்த ரஸாதலங்கள் இவை எல்லாம் நமக்கு நற்பொழுது விடியும்படி செய்யட்டும். (3)

सप्तार्णवाः सप्तकुलाचलाश्च
सप्तर्षयश्चोपवनानि सप्त ।
भूरादिलोका भुवनानि सप्त
कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥ (4)

ஸப்தார்ணவா: ஸப்தகுலாசலா: ச
ஸப்தர்ஷய: சோபவநாநி ஸப்த ।
பூராதிலோகா புவநாநி ஸப்த
குர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம் ॥

ஸப்த சமுத்திரங்கள், ஸப்தகுலபர்வதங்கள் ஸப்த ரிஷிகள், ஸப்த உபவனங்கள், பூமி முதலிய ஏழு லோகங்கள், இவையெல்லாம் நமக்கு நற்பொழுது விடியும்படி செய்யட்டும். (4)

पृथ्वी सगन्धा सरसास्तथापः
स्पर्शश्च वायुः ज्वलितं च तेज ।
नभस्सशब्दं महता सहैव
कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ॥ (5)

ப்ருத்வீ ஸகந்தா ஸரஸா ஸ்ததாப:
ஸ்பர்ச: ச வாயு: ஜ்வலிதம்சதேஜ: ।
நப: ஸசப்தம் மஹதா ஸஹைவ
குர்வந்து ஸர்வே மமஸுப்ரபாதம் ॥

மணமுள்ள பூமியும், ரஸம் பொருந்திய ஜலமும், ஸ்பர்ச சுகந்தரும் வாயுவும், ஜ்வாலையுள்ள நெருப்பும், சப்தத்துடன் கூடிய ஆகாயமும், மகத்தத்துவமும் ஆகிய இவை எல்லாம் நமக்கு இந்நாளை நன்னாளாகச்செய்யட்டும்.

इत्थंप्रभाते परमम्पवित्रं
पठेत् स्मरेद्वा शृणुयाच्च तद्वत् ।
दुःस्वप्ननाशस्त्विह सुप्रभाते
भवेच्च नित्यंभगवत्प्रसादात् ॥ (6)

இத்தம் ப்ரபாதே பரமம் பவித்ரம்
படேத் ஸ்மரேத்வா ச்ருணுயாச்சதத்வத் ।
துஸ்ஸ்வப்ந நாசஸ்த்விஹ ஸுப்ரபாதம்
பவேச்ச நித்யம் பகவத்ப்ரஸாதாத் ॥

இந்த புனிதமான வாக்கியத்தை விடியற்காலத்தில், உச்சரித்தாலும், ஸ்மரித்தாலும், கேட்டாலும், ஈசனருளால் துர்ச்சொப்பனங்கள் நசித்து எக்காலமும், நற்பொழுதாகவே சம்பவிக்கப் பெறுவர்.

6

இந்தியாவின் பொக்கிஷம்

"இந்தியாவின் மிகப்பெரிய பொக்கிஷம் எது? மூதாதையர் இந்தியாவுக்கு விட்டுச்சென்றிருக்கும் மாபெரும் செல்வம் எது? என்று என்னை யாராவது கேட்டால் சம்ஸ்கிருத பாஷையும் இலக்கியமும், அவற்றில் பொதிந்து கிடக்கும் விஷயங்களுந்தான் என்று நான் தயக்கமின்றிக் கூறுவேன். இது நமக்குக்கிடைத்திருக்கும் மகோன்னதமான பித்ரார்ஜிதமாகும். இது நம்மிடையே இருந்து வரும் வரையில், இது நம் மக்களின் வாழ்க்கைக்கு வழி துலக்கும் வரையில், இந்தியாவின் மூலாதாரமான மேதையும் இருந்துவரும். சம்ஸ்கிருதம் மிகப் பழமையானதொரு பொக்கிஷமாகப் பண்டைக் கலாசாரத்தின் உருவகமாக இன்னும் உயிரோடிருந்து வருகிறது. இவ்வளவு பழமையானதொரு பாஷை இந்த அளவுக்கு இன்னமும் ஜீவனோடு இருந்துவருவது மிகவும் ஆச்சரியந்தான்.

சம்ஸ்கிருத பாஷைப் பயிற்சியை வளர்க்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆராய்ச்சிகள் நடத்தி அநேகமாய் மறந்துபோய்க்கிடக்கும் இந்த பாஷையில் புதைந்து கிடக்கும் இலக்கியச் செல்வங்களை யெல்லாம் வெளிப்படுத்தும் வேலையில நம்முடைய பண்டிதர்களை ஈடுபடுத்த நான் விரும்புகிறேன். பாஷை விஷயத்தில் தீவிரதேசியவாதம் பேசும் நாம்பேச்சளவில் இதற்குமரியாதை செலுத்துவதுடன் நின்றுவிடுவதையும் அரசியல் நோக்கங்களுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்வதையும் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. பாஷைக்கு சேவை செய்ய செய்யவேண்டிய முறையில் இதற்கு ஒன்றும் செய்யப்படுவதில்லை. சம்ஸ்கிருதத்தின் விஷயத்திலும் சரி, தற்கால இந்திய பாஷைகள் விஷயத்திலும் சரி ஆக்க வேலைகள் வெகு அபூர்வமாகத்தானிருக்கின்றன. தானும் வாழத்தெரியாது பிறர் வாழ்ந்தாலும் பிடிக்காது என்பதுதான் நம் கொள்கையாயிருந்துவருகிறது மற்ற அபிவிருத்திகள் நமக்குப்பிடிப்பதில்லை. ஆனால் நாமாகவும் ஒன்றும் செய்வதில்லை. ஒரு பாஷை இறுதியாக வளர்ச்சி பெறுவது அதன் இயற்கை வளத்தினால்தான், சட்டங்கள் இயற்றுவதாலோ தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலோ எந்த பாஷையும் வளர்ச்சி பெற்றுவிடாது. ஆகையால் ஒரு பாஷைக்குச் செய்யப்படும் உண்மையான சேவை அந்த பாஷையின் மதிப்பையும் உபயோகத்தையும், இயற்கைவளத்தையும் வளர்ப்பதேயாகும்.

பண்டித ஜவாஹர்லால் நேரு. (13-2-49)

அக்னியைச்சுற்றி பரிஷேசனம் செய்வதில் கிழக்கே ஆரம்பித்தால் கிழக்கேயே முடியும். வடக்கே ஆரம்பித்தால் வடக்கேயே முடியும். ஆதலால் **புரஸ்தாது தக்வோபக்ரம:** என்ற ஸூத்திரத்திலேயே இவ்விஷயம் ஸித்தித்து விட்டதால் இந்த ஸூத்திரம் வேண்டாம் என்று கூறலாகாது. தர்மஸூத்திரத்தில், க்ருஹ்ய கர்மாக்களைச்செய்ய எந்தவிடத்தில் அக்னியை பிரதிஷ்டை செய்யப்போகிறோமோ அந்த விடத்தில் கிழக்கு திக்கை நோக்கி மூன்று கோடுகளும், வடக்குதிக்கை நோக்கி மூன்று கோடுகளும் போடவேண்டுமென்று அடியிற்கண்ட ஸூத்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது

यत्र क्वचनाऽग्निमुपसमाधास्यन् स्यात् तत्र प्राचीरुदीचीश्च
तिस्रस्तिस्रो रेखालिखित्वा आद्भिरवोक्ष्याग्निमुपसमिन्ध्यात् ॥

ததாபவர்க்க: என்ற இந்த ஸூத்திரம் இல்லாத போனால் மேற்கூறிய கிழக்காகப்போடும் மூன்று கோடுகளை தெற்கேயும், வடக்கு நோக்கிப்போடும் மூன்று கோடுகளை மேற்கேயும், முடிக்கக்கூடும், அதுபோல்உத்பவனத்தையும் கிழக்கே ஆரம்பித்து மேற்கேமுடித்துவிடக்கூடும். ஈசானபலியில் அக்னிக்கு மேற்கே தேவனையும் தேவியையும் ஆவாஹனம் செய்ய இரு (குடிகள்) சிறுமண்டபங்கள் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை முதலில வடக்கேயும், பின்பு தெற்கேயும் வைக்கக்கூடும். இந்தஸூத்திரத்தால் அவை எல்லாவற்றையும் கிழக்கேயோ அல்லது வடக்கேயோதான் முடிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதாவது, ப்ராசீரேகைகளை தெற்கே ஆரம்பித்து வடக்கேமுடிக்கவேண்டும். உதீசீரேகைகளை மேற்கே ஆரம்பித்து கிழக்கேமுடிக்கவேண்டும். ஈசானபலியில் தெற்கே முதலில் குடியைநிர்மாணம் செய்து பிறகு வடக்கே நிர்மாணம் செய்யவேண்டும். உத்பவனத்தையும் மேற்கே ஆரம்பித்து கிழக்கேயே முடிக்கவேண்டும்.

अपरपक्षे पित्र्याणि ॥ (7)

அபரபக்ஷே பித்ர்யாணி ॥.

கார்யாணி என்ற சொல் இங்குத் தொடர்கிறது. பித்ருக்களை உத்தேசித்து செய்யப்படும் கர்மாக்கள் கிருஷ்ண பக்ஷத்தில் செய்யப்படவேண்டும்: "ப்ரதான பித்ர்யகர்மா" என்றும்

'அங்சமான பித்ர்யகர்மா,, என்றும் பித்ர்ய கர்மா 'இருவகைப்படும். இந்தஸூத்திரத்தால் விதிக்கப்படும் கிருஷ்ணபக்ஷகாலம் ப்ரதான பித்ர்யகர்மாவிற்கே. அங்கங்கள் எல்லாம் பிரதானத்துடன் சேர்ந்து ஒரேகாலத்தில் செய்யவேண்டியவையாகையால் அவற்றிற்கு தனியாக காலாபேக்ஷை இல்லை. ஆதலால் நாந்தீசிராத்தம் முதலிய அங்கமான பித்ர்யகர்மாக்கள் அவற்றின் பிரதானமான விவாஹம் முதலிய கர்மாக்கள் செய்யுங்காலத்திலேயே செய்யப்படவேண்டும்.

இந்த கிருஷ்ணபக்ஷம் என்பது இதற்கு முன்விதிக்கப்பட்ட சுக்கிலபக்ஷத்திற்கு மட்டும் அபவாதமாக விதிக்கப்படுகிறது என்று கருதக்கூடாது, "உதகயனே, பூர்வபக்ஷம், அஹஸ்,எல்லாவற்றிற்குமே அபவாதம் எனத்தெரிய வருகிறது. எப்படி? "நச நக்தம் ச்ராத்தம் குர்வீத,, (இரவில் சிராத்தம் செய்யலாகாது) எனநிஷேதிக்கப்பட்டிருக்கிறது. "உதகயன" என்ற ஸூத்திரத்திற்கு பித்ரு கர்மாக்களில் பிரவ்ருத்தி இருந்தால் இராத்திரி காலத்திற்கு ப்ரஸக்தியே இல்லாததால் நிஷேதம் செய்யவேண்டிய அவசியமில்லை. நிஷேதமோ இருக்கின்றது. ஆதலால் "உதகயன', என்ற ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட எல்லாவற்றிற்கும் அபவாதம் எனஸித்திக்கின்றது. இதன்பிரயோஜனம். தக்ஷிணாயனத்திலும் கிருஷ்ணபக்ஷத்தில் காம்யசிராத்தம் செய்யலாம் என்பதுதான். மாஸிசிரார்த்தம். "மாஸி மாஸி கார்யம்,, (பிரதிமாஸம் செய்யவேண்டும்) எனவிதிக்கப்பட்டிருக்கின்றபடியால் தக்ஷிணாயனத்திலும் செய்யலாம் என்று ஏற்பட்டுவிட்டது. இந்தஸூத்திரத்தால் எல்லா பித்ருகர்மாக்களும் கிருஷ்ணபக்ஷத்தில் செய்யவேண்டுமென விதித்துவிட்டதால் "மாஸிச்ராத்தஸ்யாபரபக்ஷே', (ஆ-க்ரு- 21-1-) என்று மறுபடியும் அபரபக்ஷ விதானம் எதற்காக? நியமத்திற்காக. மாஸிசிராத்தம் அபரபக்ஷத்திலேயேதான் செய்யவேண்டும், எக்காரணம் பற்றியும் சுக்கிலபக்ஷத்தில் செய்யலாகாது என்று நியமம் மறுபடியும் ஸூத்திராரம்ப ஸாமர்தியத்தால் சித்திக்கின்றது. இது இல்லாதபோனல் "ஸர்வோ பரபக்ஷ: பூர்ணமாஸஸ்ய" (பூர்ணமாஸ இஷ்டிக்கு கிருஷ்ணபக்ஷம் முழுவதும் கௌண காலம்) என்றுவிதிக்கப்பட்டிருப்பதுபோல், கிருஷ்ணபக்ஷத்தில் செய்யவேண்டியவைகளுக்கும் சுக்லபக்ஷம் கௌணகாலமாக ஆகலாமையால், மாஸிசிராத்தத்திற்கு கிருஷ்ணபக்ஷத்தில் ஏதாவது

உபரோதம் ஏற்பட்டால் சுக்லபக்ஷத்திலும் செய்யலாம் என்று ஏற்படும். இதனுல் அது கூடாது என்று ஏற்படுகிறது. ஆதலால் மாஸிசிராத்தத்திற்கு உபரோதம் நேரிட்டால் ஸ்மார்த்த நித்ய கர்மலோபத்திற்காகவுள்ள பிராயச்சித்தம் மட்டுந்தான் செய்யவேண்டும். அந்த பிராயச்சித்தம் 'பூர்புவஸ்ஸுவ: ஸ்வாஹா,, என்ற ஒருஹோமந்தான். இதற்கு 'ஸர்வப்ராயச்சித்தம், எனப்பெயர். இப்மாதிரி பிராயச்சித்தம் ஆஹவனீயாக்னியில் செய்ய வேண்டுமென்று பஹ்ருசசுருதியில் விதிக்கப்பட்டிருந்தாலும் ஸ்மார்த்த கர்மாக்களைப் பொருத்த மட்டில் ஆஹவனீய ஸ்தானத்தில் ஔபாஸனாக்னியை வைத்துக்கொண்டு அதிலேயே செய்யவேண்டும். ப்ராயச்சித்தமாக உபவாஸமும் இருக்கவேண்டும்.

வேதோதிதானும் நித்யானும் கர்மணும் ஸமதிக்ரமே ।
ஸ்நாதக வ்ரதலோபேச ப்ராய: சித்தமபோஜனம். ॥

வேதோக்தமான நித்ய கர்மாக்களுக்கு லோபம் ஏற்பட்டாலும், ஸ்நாதகவ்ரதவ்ரதலோபம் ஏற்பட்டாலும் உபவாஸம், பிராய: சித்தமாக ஆகும். (மனு 11-203) மூன்ருவது பிராயசித்தம் பிராணயாமம். இம்மூன்றிற்கும் சமுச்சயமே தவிர விகல்பமல்ல.

இந்தஸந்தர்பத்தில் மற்றகர்மாக்களுக்கு லோபம் ஏற்படில் எவ்விதம் பிராய:சித்தம் செய்ய வேண்டும் என்றும் உரைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமே மற்ற பாகயக்ஞங்கள் முக்கியகாலம் கௌணகாலம் இவ்விரண்டிலும் செய்யப்படாவிடில் மேற்கூறியபடி, ஸர்வப்ராய:சித்தம் உபவாஸம் ப்ராணயாமம், இம்மூன்றும்,செய்யப்படவேண்டும். முக்கியகாலம் சென்று கௌணகாலத்தில் செய்தால் ஸர்வப்ராய:சித்தத்தை மட்டும் செய்து அவைகளை அநுஷ்டிக்க வேண்டும். ஔபாஸன ஹோமத்தின் காலங்கள் கடந்து விட்டால் எட்டு ஹோமகாலங்கள் வரை ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு ஸர்வப்ராய: சித்தத்தை செய்து சென்ற ஹோமங்கள் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் பிராணயாமம் உபவாஸம் என்ற இவ்விருபிராய: சித்தங்களும் அநுஷ்டானத்திலில்லை. எட்டு ஹோமகாலங்களுக்கு மேல் அக்னி தரிக்கப்பட்டு வந்தாலும், " அநுகதோ மந்த்ய:,, (ஆ -க்ரு- 5-17) என்ற ஸூத்திரத்தில் கூறியபடி அக்னியை உற்பத்தி செய்து பிராய: சித்தமும் செ

ய்ய வேண்டியதுதான். சோப்பல் முதலிய காரணத்தால் வெகுநாள் வரை ஔபாஸனாக்னியை இரக்ஷிக்காமலே இருந்து விட்டால் ஸ்மிருதிகளில் கூறியபடி, அந்தக்காலத்திற்சேற்ற க்ருச்ரம், ஹோமத்ரவ்யதானம் இவற்றை செய்யவேண்டும். உசித காலத்தில் ஆரம்பிக்கப்படாத பாகயக்ஞங்கள் ஸர்வப்ராய: சித்தஹோமம் செய்து ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஜாதகர்மாமுதலியவை உசிதகாலத்தில் செய்யப்படாவிட்டால் ஸர்வப்ராய: சித்தத்தை அநுஷ்டித்தே செய்யவேண்டும்.

கர்மாங்கங்களுக்கு லோபம் வந்தால் ஸர்வப்ராய: சித்தம், ப்ராணாயாமம், இவ்விரண்டும் ப்ராய:சித்தம். "ஆராதுபகாரக, அங்கங்களாயிருந்தால், அதாவது ஆத்மாவில் அதிருஷ்டத்தை உண்டுபண்ணக்கூடிய அங்கங்களாயிருந்தால், மேற்படி இரண்டு ப்ராய: சித்தங்களையும் செய்து கர்மாமுடியும் வரை அந்த அங்கங்களை அநுஷ்டிக்கலாம். திரவ்யத்தில் ஸம்ஸ்காரத்தை உண்டுபண்ணக்கூடிய (ஸந்நிபத்யோபகாரக) அங்கங்களாயிருந்தால் அந்த த்ரவ்யத்தை உபயோகிப்பதற்கு முன்பே அநுஷ்டிக்கவேண்டும்.

பாகயக்ஞங்களிலேயே, ஆக்னி ஹோத்ரிக விதியிலும் (இது 2-வது கண்டத்தில் சொல்லப் படப்போகிறது) உபநயனத்திலும் அங்கலோபம் ஏற்பட்டால் "புவ: ஸ்வாஹா, என்று அந்தந்த கர்மாவிற்கு உரிய அக்னியில் ஹோமமும், "அனாஜ்ஞாதத்ரய ஜபம் அல்லது ஹோமமும் ப்ராய: சித்தம். இவ்விரண்டும் ச்ரௌதப்ராய:சித்தம். அவை இங்குசெய்யப்படவேண்டும் என்பதற்காகவே ப்ராம்மண வேக்ஷோவிதி:(ஆ-க்ரு-2-11-) ச்ருதிதஸம்ஸ்கார: (ஆ-தர்ம-2-1-8) என்றசூத்திரங்கள் பிரவர்த்தித்திருக்கின்றன. இவ்விதம் ப்ராய: சித்தவிஷயங்களை அறியவேண்டும்.

பின்பு பிரகிருதவிஷயத்தை ஆலோசிப்போம். மாஸிசிராத்தத்திற்கு காலம் அபரபக்ஷம். நித்யசிரார்த்தம், ஏவம்ஸம்வத்ஸரம் (ஆ-த-2-18-12) (இம்மாதிரி ஸம்வத்ஸரம் முழுவதும் செய்யவேண்டும்) எனவிதிக்கப்பட்டிருப்பதால் சுக்லபக்ஷத்திலும் செய்யவேண்டியதுதான்.

தஸ்மிந் த்ருஷ்டே பராவரே "என்ற சுருதி கூறுகிறது.

இந்த சுலோகத்தில் தத்வ ஸாக்ஷாத்காரத்தின் பயனாகிய "அவித்யா நிவிருத்தி." "ஆனந்தா வாப்தி" என்ற பலத்யாயத்தின் (பிரம்மஸூத்திரம் 4-வது அத்தியாயம்) அர்த்தம் பிரதிபாதனம் செய்யப்பட்டது. (4)

"யதோ வாசோ நிவர்தந்தே" "நசக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா" முதலிய சுருதிகள் கூறுகிறபடி இந்திரியங்களுக்கெல்லாம் எட்டாத ஈச்வரன் கூட பக்தர்களை பரிபாலனம் பண்ணுவதற்காக மிகவும் நீசமான மத்ஸ்யாவதாரம் முதலியவற்றை செய்திருக்கிறார். அத்தகைய கருணாமூர்த்தியான பகவான் நமக்குள்ள ஸம்ஸார பயத்தை நீக்கி நம்மைக்காக்கவேண்டுமென அடியிற்கண்ட சுலோகத்தில் பிரார்த்திக்கிறார்.

मत्स्यादिभिरवतारै
रवतारवताऽवताखिलां वसुधाम् ।
परमेश्वर परिपाल्यो
भवता भवतापभीतोहम् ॥ (5

மத்ஸ்யாதிபிரவதாரை
ரவதாரவதா ऽ வதாகிலாம் வஸுதாம் ।
பரமேச்வர பரிபால்யோ
பவதா பவதாப பீதோ ஹம் ॥ (5)

(ப -ரை) परमेश्वर — ஏ பரமேச்வா, मत्स्यादिभिः — மீன் முதலிய, अवतारैः — அவதாரங்களால், अवतारवता — அவதாரங்களை எடுத்து, अखिलां वसुधां — ஸமஸ்த பூமண்டலத்தையும், अवता — இரக்ஷித்த, भवता — தங்களால், भवतापभीतः — ஸம்ஸாரதாபத்தைக்கண்டுபயந்த, अहम् — நான், परिपाल्यः .... காப்பாற்றத்தகுந்தவனாக, (இருக்கிறேன்)

பரமேச்வர:- "பராசா ஸௌ மாச, தஸ்யா: ஈச்வர:," என்ற விக்ரஹப்படி, ஸமஸ்த பிரபஞ்சத்திற்கும் காரணமான மாயைக்கு நியந்தாவாகையால் பரமேச்வரனும்.

ஸர்வோத்க்ருஷ்டர்களான ஹிரண்யகர்ப்பன் முதலியவர்களுக்கெல்லாம் ஈச்வரனாகையால் பரமேச்வரன் என்றுமாம்.

எல்லோரையும் விட உத்க்ருஷ்டராயும், ஈச்வரனுமிருப்பதால் பரமேச்வரன் என்றும் கொள்ளலாம்.

அஹம்:- ஆசையாகிற வலையில் சிக்குண்டு காம, க்ரோத, லோபம், முதலிய துஷ்டமிருகங்களால் கபலீகாரம் செய்யப் பட்டவனாகிலும் அஹங்காரங்கொண்ட நான், தங்களை அண்டியவன் என்ற முறையில் இரக்ஷிக்கத்தக்கவன்.

பவதாபபீத:- உலகங்களுக்கெல்லாம் பற்பல தீங்குகளை விளைவித்த இராவணன் முதலிய துஷ்டர்களைக்கொன்று ஸாதுக்களுக்கு நன்மையைத்தாங்கள் உண்டுபண்ணியிருந்தாலும், தற்காலம் ஸம்ஸாரமென்ற கொடியத்தீயைக்கண்டு, புலியின்வாயில் விழுந்தவன் போல் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். ஆதலால் நான் காப்பாற்றத் தகுந்தவன்.

அகிலாம் வஸுதாம் அவதா:- பூமண்டலத்தை ரக்ஷித்தார் என்றால் அதிலுள்ள ஸமஸ்த பிராணிகளையும் ரக்ஷித்தார் என்று பொருள். இராவணன், முரன், நரகன். கம்ஸன் முதலியவர்களை பகவான் கொன்றாரல்லாமல் இரக்ஷிக்கவில்லையே? அப்படியிருக்க எல்லோரையும் இரக்ஷித்தார் என்பது எவ்விதம் பொருந்தும் என்றால், துஷ்டர்கள் பற்பல பாபங்களைச் செய்தே இராவணன் முதலியவர்களாக ஜன்மம் எடுத்திருக்கிறார்கள். அவர்களைக் கொன்று அவர்களுடைய பாபங்களை அகற்றி அவர்களுக்கும் நற்கதியையே கருணாமூர்த்தியான பகவான் அளித்தார் என்று தான் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. தாய் சில குழந்தைகளை அடித்து வளர்ப்பாள். சிலகுழந்தைகளைக் கொஞ்சி வளர்ப்பாள். இருந்தாலும் எல்லா குழந்தைகளிடமும் தாய்க்கு பிரீதியும், தயையும் ஒரேவிதமாகத்தான் இருக்கும். அடிபடும் குழந்தைகளிடம் தயையில்லையென்று கூறமுடியாது. துஷ்ட குழந்தைகளை வளர்க்கும் விதம் வேறு, சாதுவான குழந்தைகளை வளர்க்கும் விதம் வேறு. அதுபோல்தான் பகவான் சிலரை சிக்ஷித்து காப்பாற்றுகிறார். சிலரை வேறு விதமாகக் காப்பாற்றுகிறார். இக்கருத்து அடியிற்கண்ட சுலோகத்தில் அடங்கியுள்ளது.

“லாலனே தாடனே மாதுர்நா காருண்யம் யதார்பகே ।
தத்வதேவ மஹேசஸ்ய நியந்துர்குணதோஷயோ: ॥

கம்ஸன், சிசுபாலன் முதலியவர்கள் பகவானால் கொல்லப் பட்டவுடன், அவர்களுடைய சரீரங்களிலிருந்து கிளம்பிய ஒரு தேஜஸ் பகவானிடம் ஐக்யமாயிற்று என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்ல நினைத்த பூதனையும் உத்தம கதியை அடைந்தாள் என ஸ்ரீ பாகவதம் உரைக்கிறது.

மத்ஸ்யாதிபிரவதாரை:- வைகுண்டத்தில் இருக்கும்பொழுது பகவான் உலகை இரக்ஷிப்பதைவிட அவதாரங்களில் இரக்ஷிப்

பதே மிகப் பிரஸித்தமானது, என்பதை இந்த சொல் குறிப்பிடுகின்றது. (5)

இவ்விதம். வேறு யாராலும் செய்யமுடியாத காரியங்களை செய்யும், அளவிடமுடியாத சக்தியுள்ள, பக்தவத்ஸலரான பகவானை தியானம் செய்து, அந்த தியான பரிபாகத்தால் ஏற்பட்ட ஆனந்தாதிசயத்தால், பிருகுவல்லியிலுள்ள பிரம்மவித்கானம் போல், இந்நூலாசிரியரும் பகவானைக்குறித்துகானம் பண்ணுகிறார். அல்லது, பெரும்பாலும் இக்கொடிய கலியில் ஜனங்கள் ஏராளமாக பாபங்களைச் செய்வதால் அவர்களுடைய மதியில் மாசு ஏற்படுகின்றது. விஷயங்களாகிற விஷத்தால் கொஞ்சநஞ்சமிருக்கின்ற அறிவும் கெட்டுவிடுகிறது ஆதலால் அவர்களுக்கு வேறு எவ்வித உபாயத்திலும் அதிகாரமில்லாததால், பகவந்நாமஸங்கீர்த்தனம் ஒன்றே ஸமஸ்த பாபங்களையும் அழித்து, சிரேயஸ்ஸை அளிக்கக்கூடுமெனக் கருதி, எல்லோரும் பகவந்நாமஸங்கீர்த்தனத்தில் விசேஷமாக ஈடுபடுவதற்காக, தானே இந்த சுலோகத்தில் அதைச் செய்து காண்பிக்கிறார், என்றும் கூறலாம்.

“ராமேதி வர்ணத்வய மாதரேண
ஸதா ஸ்மரன் முக்தி முபைதி ஜந்து: ।
கலௌ யுகே கல்மஷமானஸானாம்
அந்யத்ர தர்மே கலு நாதிகார: ॥

ரா, ம, என்று இவ்விரு அக்ஷரங்களை எப்பொழுதும் ஆதரவுடன், ஸ்மரித்துக்கொண்டே இருந்தால் எவ்வித ஜந்துவும் முக்தியடைந்துவிடும். இக்கொடிய கலியில் பாபம் நிறைந்த மனமுடையவர்களுக்கு மற்ற தர்மங்களில் அதிகாரமில்லை.

“கலிம் ஸபாஜயந்த்யார்யா: குணஜ்ஞா: ஸாரபாகின: ।
யத்ர ஸங்கீர்த்தனேனைவ ஸர்வஸ்வார்த்தோஹி லப்யதே ॥

விஷயமறிந்த, ஸாரதர்சிகளான பெரியோர்கள் இக்கலியை விசேஷமாகப்போற்றுகிறார்கள். ஏனென்றால் இக்கலியில் பகவானுடையநாமஸங்கீர்த்தனத்தாலேயே நன்மையும் கிட்டிவிடுகிறது.

முதலிய வசனங்கள் கலியில் நாமஸங்கீர்த்தனத்தின் மஹிமையை போதிக்கின்றன.

दामोदर गुणमन्दिर
सुन्दरवदनारविन्द गोविन्द ।
भवजलधिमथनमन्दर
परमं दरमपनय त्वं मे ॥ (6)

தாமோதர குணமந்திர
ஸுந்தரவதனாரவிந்த கோவிந்த ।
பவஜலதிமதன மந்தர
பரமம் தரமபநய த்வம் மே ॥ (6)

(ப - ரை) **दामोदर** — யசோதையினால் வயிற்றில் கயிற்றால்கட்டுண்டவரே **गुणमन्दिर** — ஸமஸ்தகுணங்களுக்கு இருப்பிடமானவரே, **सुन्दरवदनारविन्द** - அழகியமுகாரவிந்தத்தை உடையவரே **गोविन्द** — வேதங்களை உணர்ந்தவரே **भवजलधिमथनमन्दर** — ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை அகற்றுவதில் மந்தரமலைபோல் சக்திவாய்ந்தவரே **मे** — என்னுடைய **परमं दरं** — மிகக்கொடிய பயமான ஸம்ஸாரத்தை **त्वं** — தாங்கள் **अपनय** — போக்கடியுங்கள்.

தாமோதர:- "ஸ்ரீ கிருஷ்ணனை அவரது இளம்பிராயத்தில் அவர் செய்த சில துஷ்டச் செயல்களுக்காக யசோதை கயிற்றால் வயிற்றில் கட்டிவிட்டாள். அதனால் "தாமோதர" என்ற பெயர் வழங்கலாயிற்று.

"தாம" உலகம் முழுவதும் கட்டும் கயிறு. அதாவது மாயை. அது ஸ்ரீ பகவானுடைய ஸ்வரூபத்தில் கற்பிதமாக இருப்பதால் "தாமோதர"னும். அல்லது பால்யத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மண்ணைத்தின்றுவிட்டான் என பலராமன் முதலியோர்கள் யசோதையிடம் கூற, வாயைத்திற "பார்ப்போம்" என யசோதை உடனே கடிந்து பேசவே, ஸ்ரீ கிருஷ்ணன் வாயைத் திறந்தார். அங்கு மாயையால் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாம் தோன்றின. ஆதலாலும் "தாமோதரன்" எனக்கூறலாம்.

"தமாத் + உதரா, தஸ்யா:- விஷய:" என்ற விக்ரஹப்படி, தமம், சமம் முதலிய ஸாதனங்களால் உண்டாகும் "அஹம் பிரம்மாஸ்மி" என்ற அகண்டாகாரஞானத்தில் விஷயமாவதால் 'தாமோதரன்!' என்றுமாம். "தமாத்தாமோதரம்விது:" என்பது ஸ்ரீ வியாஸ வசனம்.

யசோதை முதலியர்களால் கட்டுண்டவன் மற்றவர்களுடைய ஸம்ஸார பந்தத்தை எப்படி நிவிருத்தி செய்யக்கூடும்? என்ற சங்கைக்கு ஸமாதானத்தை "குணமந்திர" என்ற அடுத்த ஸம்போதனத்தால் வெளியிடுகிறார். பக்தவாத்ஸல்யத்தால் பகவான் கட்டுண்டாலும், அண்டியவர்களுடைய பந்தத்தை நிவர்த்தி செய்யும் சக்திக்கு ஸர்வசக்தனான பகவானிடம் குறையில்லை.

விதுர நீதி

கண், காது, மூக்கு, ரஸனை, த்வக் என்ற ஐந்து இந்திரியங்களுடன் கூடிய மனிதனால் ஆறுவதாகிய மனது என்ற இந்திரியம் மட்டும் சரியாக பாதுகாக்கப்பட வேண்டும். அது ஸ்வல்ப்ப கெடுதலையடைந்தாலும் ஓட்டைப்பாத்திரத்திலுள்ள ஜலம் போல் நல்ல அறிவு அவனை விட்டு அகன்று விடும். ஆதலால்தான் நமது சாஸ்திரங்கள் மனதை அடக்குவதற்கு பல உபாயங்களைக் கூறுகின்றன.

ஐச்வர்யத்தை அடைய விரும்புகின்றவன் அடியிற்கண்ட ஆறு குற்றங்களையும் அடியோடு ஒழிக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சின தூக்கம், மயக்கம், அவசியமில்லாத பயம், கோபம், சோம்பல், எக்காரியத்தையும் தாமதமாகவேசெய்தல். இந்த ஆறிலும் ஈடுபட்டவர்கள் ஒரு காலத்திலும் முன்னேற்றமடைய முடியாது. ஒருமஹாகவி "நாட்டினர்களுடைய சோம்பேரிதனத்தால் நாடுமுழுவதுமே அழிந்துவிடும்." எனக்கூறியுள்ளார். சிலர் சூர்யோதயத்திற்குபிறகு வெகுநேரம் வரை தூங்கிக்கொண்டே இருக்கின்றார்கள். பல நாட்களில் சூர்யனுடைய கிரணங்களே வந்து அவர்களை தட்டி எழுப்ப வேண்டியிருக்கின்றன. அவர்களைப் பார்த்து "ஏன் இப்படி தூங்குகிறீர்கள்? இது நியாயமில்லையே" என்று கேட்டால் 'ஏன்? நான்எப்படியிருந்தால் என்ன! முன்னமேயேநான் எழுந்திருந்து செய்யவேண்டியது ஒன்றுமில்லையே! எனக்கு சமஸ்தவசதியும் பூர்ணமாக இருக்கிறது" என்றும் பதில் உரைக்கின்றனர். அவர்களைப் பார்த்து விதுரர் "அடே மூடா! நீ இனி இவ்விதம் செய்யாதே! இப்படிச்செய்தால் உன்னை விட்டு விரைவில் இலக்ஷ்மி விலகுவாள்" என உபதேசிக்கிறார்.

கீழ்கண்ட ஆறுபேர்களை நம்பினால் ஓட்டைக்கப்பலில் ஏறி ஸமுத்திரத்தில் செல்லுகிறவனுடைய கதியே நேரிடுமாம்.

சாஸ்திரார்த்தங்களை விளங்கக்கூறும் திறமையற்ற ஆசார்யன், வேதமோதாத ரித்விக், குடிகளைகாப்பாற்றாத அரசன், எப்பொழுதும் கொடிய சொற்களையே பேசும் மனைவி, கிராமத்திலேயே வீட்டில் சுகமாக வாழவேண்டுமென்ற இடையன், காட்டிற்சென்று காலத்தைக்கழிக்க வேண்டுமென்ற நாவிதன்.

சாஸ்திரார்த்தங்களை திரட்டித்தந்து ஆசாரத்தை புகட்ட வேண்டியவன் ஆசார்யன். அவனுக்கு விஷயத்தை எடுத்து விளங்கச் சொல்லும் திறமையில்லையென்றால் அவனால் என்ன

பயன்? பசுக்களைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்த்து அவற்றை வளர்க்க வேண்டியது இடையனுடைய காரியம். அதை அவன் செய்யாமல் கிராமத்திலேயே சுகமாக வாழ விருப்பினால் அவனை நம்புவது வீண்தான்.

பிரதிதினம் பொருள் அபிவிருத்தி, நோவு நொடி இல்லாமல் இருத்தல், மனதிற்கு இசைந்தவளாயும், பிரியத்தைப்பேசுகின்றவளாயுமுள்ள மனைவி, சொன்னது கேட்கும் பிள்ளை, பணத்தை அளிக்கும் படிப்பு, இவ்வாறும் இந்த ஜீவலோகத்தில் சுகத்தைத்தரும் சாதனங்களாம். நல்ல படிப்பு படித்தவுடன் ஏராள வருவாயுள்ள ஓர் உத்தியோகம். உடனே தன்மனதிற்கு பிடித்த ஓர் பெண்மணியின் லாபம். அநவரதம் அந்தப் பிரிய நாயகியின் இனிமையான சொற்களைக் கேட்கும் பாக்யம். உசிதமான காலத்தில் பிறந்த பிள்ளைக்குச் சரியான வயது வந்ததும், அவன்,தான் சொன்னபடியெல்லாம் கீழ்படிந்து மரியாதையாக நடப்பது! பலதுறையிலிருந்தும் ஏராளமாக பணம் பிரதிதினம் விருத்தியடைந்துகொண்டே இருப்பது, என்றால் இதைவிட இவ்வுலகில் வேறு என்ன சுகமிருக்கிறது.

காமம்-கோபம், சோகம்-மோஹம், மதம்-அஹங்காரம், என்ற மனதிலுள்ள ஆறு தோஷங்களை ஒருவன் அடக்கி விட்டால் அவன் எவ்வித பாபங்களையும் செய்யமாட்டான். எத்தகைய துன்பத்திற்கும் உள்ளாகமாட்டான். அவனே "ஜிதேந்திரியன்" எனவும் அழைக்கப்படுவான்.

சிலருக்கு சிலர் இல்லையேல் பிழைப்பே இல்லை. அதாவது திருடர்கள் ஏமாந்தவர்களை அண்டியும், வைத்தியர்கள் ரோகிகளை அண்டியும், ஸ்திரீகள் காமுகர்களை அண்டியும், யாகம் செய்துவைக்கின்றவர்கள் யாகம் செய்கின்றவர்களை அண்டியும், நியாயாதிபதிகள் சண்டை போடுகின்றவர்களை அண்டியும், அறிவாளிகள் மூடர்களை அண்டியும் பிழைக்கின்றார்கள்

ஒருவன் ஏமாறாமல் ஜாக்கிறதையாக இருக்கிறான் என்றால் அவனிடம் திருடன் என்ன செய்யமுடியும்? ஒருவனுக்கு வியாதியில்லை என்றால் வைத்தியனுக்கு அங்கு என்ன வேலை? ஆதலால் வியாதிவராமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது தான். கருத்து. வைத்தியனை விரட்டி விடவேண்டுமென்றல்ல. "வைத்தியனுக்குக்கொடுப்பதை வாணியனுக்கு கொடு" என்பது பழமொழி. வாணியனுக்குக் கொடுத்தால் பணச்செலவு மட்டும் தான். வைத்தியனுக்குக் கொடுத்தால் பணத்திற்கும் செலவு, சரீரத்திற்கும் சிரமம். ஒரு ஊரில் வழக்கே இல்லை என்றால் அவ்

வூரிலுள்ள கோர்டுகள் எடுபட வேண்டியதுதான். "மூடர்களை அண்டியே கெட்டிக்காரர்கள் பிழைக்கிறார்கள்." என்று கௌரவர்களையும் பாண்டவர்களையும் குறித்து சொன்ன வார்த்தை. மூடர்களுக்கு இராஜ்யத்தை ஆளும் திறமை இல்லாததால் அந்த இராஜ்யம் காலக்கிரமத்தில் அறிவாளிகளை அடைந்துவிடும். அவ்விதம் செல்லாமலிருக்க மூடர்கள் தம் அறியாமையைத்தான் ஒழிக்க முயலவேண்டுமல்லாமல் அறிவாளிகளை தூஷிப்பதிலும் திட்டுவதிலும் பயனில்லை. தற்காலம் உலகில் ஒருசாரர் சுகவாழ்க்கை நடத்துகின்றார்களே எனக்கருதி மற்றொரு சாராருடைய மனம் பொங்குகிறது. அவர்கள் விதுரருடைய இந்தப் பொன்மொழியை உற்று கவனிக்க வேண்டும்.

பசுக்கள், பிறரிடம்ஸேவை, வியவசாயம். மனைவி, வித்யை, தனக்குச்சமமில்லாதவரிடமுள்ள நட்பு, இவ்வாறையும், இடைவிடாமல் கவனித்துக் கொண்டே இருக்கவேண்டும். தவறினால் இவையெல்லாம் நசித்து விடும். "மாடோ பாடோ" என்று முன்னோர்கள் மொழி. மாட்டை வாங்கி கட்டினால் மட்டும் போதாது. இடை விடாமல் அதோடு பாடுபடவேண்டும். அப்பொழுதுதான் அதன் பயனைப் பெறலாம். நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விட்டு வருஷக்கணக்கில் அவற்றை திரும்பக்கூட பாராமல் நிலச்சுவான்தார்கள், உல்லாசமாக நகரத்திலேயே காலங்கழித்து வந்தால் 'நிலம், உழுகின்றவர்களுக்குத்தான்" என்று முதலில் கூறப்படும். பின்பு, அவ்விதமே ஆனாலும் ஆகிவிடும். அதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை, என்கிறார் விதுரர்.

வித்யை பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் அதை எப்பொழுதும் பராமர்சித்துக்கொண்டே இருக்கவேண்டும். மிகப் பரிசயமுள்ள ஒருவிஷயத்தை எடுத்துரைப்பதானாலும் விஷயமறிந்தவர்கள் பூர்வாலோகனம் செய்யாமலிருக்க மாட்டார்கள். அதற்காகத்தான் வேதத்தைப் பிரதிதினம் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டுமென விதிக்கப் பட்டிருக்கிறது.

"விவாஹமானபிறகு பிரதிதினம் அக்னியை ரக்ஷிக்கவேண்டும். அதற்காக மனைவி கூடவே இருக்கவேண்டும்" என சாஸ்திரங்களின் முடிவு, அந்த முடிவில் பல கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன. மனைவியின் சரிதம் கெடாமல் இருக்க வேண்டுமென்பது முக்கியநோக்கம். "குடிப்பழக்கம், கெட்டவர்களுடன் சேர்க்கை, கணவனை விட்டுப் பிரிந்திருத்தல், தனியாக தேசாடனம் செய்தல், பகலில் தூங்குதல், அடிக்கடி பிறர் வீட்டில்தங்கியிருத்தல், 'இவ்வாறும் ஸ்திரீகளைக் கெடுத்துவிடும்" என்கிறார்

ஷண்ணவதி (96) சிராத்தமும், அவற்றின் காலமும்.

(V. வைத்யநாத சாஸ்திரிகள் தஞ்சை.)

இவ்வுலகில் அதிகாரமுள்ள ஒவ்வொருவனும் ப்ரதி வருஷமும் செய்யவேண்டியதாக ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கிற சிருத்தங்கள் 96. இவற்றுள் ஒருவன் செய்யவேண்டிய ப்ரத்யாப்தீக, ஆப்தீக சிராத்தங்கள் சேர்க்கப்படவில்லை.

அவைகளின் விபரம்.

अमायुगमनुक्रान्तिधृतिपाता महालयाः ।
अष्टकान्वष्टकाश्चैव षण्णवत्यः प्रकीर्तिताः ॥

அமா யுக மனு க்ராந்தி த்ருதி பாதா மஹாளயா: ।
அஷ்டகா ந்வஷ்டகா: சைவ ஷண்ணவத்ய: ப்ரகீர்த்திதா: ॥

அமாவாஸ்யை	12	
யுகாதி	4	
மன்வாதி	14	
ஸங்க்ராந்தி	12	
வைத்ருதி	13	இப்படிக்கு ஒரு வருஷத்தில் 96 சிருத்தங்கள்.
வ்யதீபாதம்	13	
மஹாளயம்	16	
அஷ்டகா	12	
ஆக மொத்தம்	96	

அமாவாஸ்யை ப்ரசித்தமானது.

யுகாதி

வைசாகசுக்லத்ருதீயை	க்ருதயுகம்
கார்த்திகசுக்ல நவமீ	த்ரேதாயுகம்
பாத்ரபத க்ருஷ்ணத்ரயோதசீ	த்வாபரயுகம்.
மாக அமாவாஸ்யை	கலியுகம்.

तिथ्यग्नी न तिथिस्तिथ्याशेकृष्णेभो ऽनलोग्रहः ।
तिथ्यर्कौ न शिवोश्वोऽमातिथीमन्वादयो मताः ॥

திதயக்னீ ந திதி ஸ்தித்யாசே க்ருஷ்ணே பே நலோ க்ரஹா: ।
தித்யர்கௌ ந சிவோச்வோமா திதீ மன்வாதயோ மதா: ॥

இதில் உத்தரார்தத்தில் "அமாதிதீ" என்ற பதம் வரையில் மொத்தம் 12 பதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பதத்தாலும், ஒவ்வொரு மாதத்திலுள்ள மன்வாதி குறிப்பிடப்படுகிறது. அவை கீழே குறிப்பிட்டபடி. இங்குள்ள பதங்களின்பொருள்:-

திதி	பௌர்ணமி	
அக்னி	த்ருதீயை	(அக்னிகள் 3)
ந	இல்லை	
ஆசா	தசமி	(திக்குகள் 10)
க்ருஷ்ணேப:	க்ருஷ்ணஷ்டமி	(திக்கஜங்கள் 8)
அநல:	திருதீயை	(அக்னிகள் 3)
க்ரஹா:	நவமி	(கிரஹங்கள் 9)
அர்க்க:	த்வாதசி	(ஸூர்யன் 12)
சிவ:	ஏகாதசி	(ருத்ரன் 11)
அச்வ:	ஸப்தமி	(சூரியனின் குதிரை 7)

மன்வாதி	சுக்லபக்ஷம்		கிருஷ்ணபக்ஷம்	
சைத்ரம்	பூர்ணிமா, த்ருதீயை	2		
வைசாகம்	கிடையாது			
ஜ்யேஷ்டம்	பூர்ணிமா	1		
ஆஷாடம்.	பூர்ணிமா, தசமீ	2		
ச்ராவணம்			அஷ்டமீ	
பாத்ரபதம்	த்ருதீயை	1		
ஆச்வயுஜம்	நவமீ	1		
கார்த்திகம்	பூர்ணிமா, த்வாதசீ,	2		
மார்கசீர்ஷம்	கிடையாது.			
புஷ்யம்	ஏகாதசீ	1		
மாகம்.	ஸப்தமீ	1		
பால்குனம்	பூர்ணிமா	1	அமாவாஸ்யை	1
		12		2

159834
சென்னை-600 0..

ஸங்க்ராந்தி

இது சென்ற சஞ்சிகையில் விஸ்தாரமாக நிரூபணம் செய்தாய்விட்டது.

வைத்ருதீ, வ்யதீபாதம்

இவ்விரண்டும் யோக விசேஷங்கள். ஒவ்வொரு மாதத்திலும் இந்த யோகங்கள் நேர்ந்த தினம் சிருத்த தினமாகும்.

மஹாளயம்:- ஆஷாட பௌர்ணமியிலிருந்து ஐந்தாவ

தான கிருஷ்ண பக்ஷத்தில் (இது பெரும்பாலும் சூர்யன் கன்யா ராசியில் சஞ்சரிக்கும்பொழுது நேரிடலாம்) பிரதமைமுதல் சுக்ல பக்ஷம்பிரதமை உள்பட 16 நாள் பிரதிதினம் செய்யவேண்டியது.

அஷ்டகா	கிருஷ்ணபக்ஷம்	
மார்கசீர்ஷம்	ஸப்தமீ அஷ்டமீ நவமீ	பூர்வாஷ்டகா மத்யாஷ்டகா அன்வஷ்டகா
புஷ்யம்	,,	,,
மாகம்	,,	,,
பால்குனம்	,,	,,

ஆக நான்கு மாதங்களிலும் சேர்ந்து 12 சிருத்தங்கள்.

பார்வண சிராத்த கால நிர்ணயம்.

நைமித்திகேஷு சிராத்தேஷு நகாலநியம: ஸ்ம்ருத: ।

கிரஹணம், ஸங்கரமணம் முதலியநைமித்திகசிருத்தங்களுக்கு கால நியமம் கிடையாது என்று சொல்லியிருப்பதால் இவற்றைத்தவிர மற்றவைகளில் சில சிராத்தங்கள் கிருஷ்ண பக்ஷங்களிலும், சில சுக்லபக்ஷங்களிலும் நேரிடுவதால் அது விஷயமான நிர்ணயம் பின் வருமாறு:-

யுகாதி சிருத்தங்களில் இரண்டு சுக்லபக்ஷத்திலும்.

மன்வாதி சிருத்தங்கள் இரண்டைத்தவிர மற்ற 4-ஆம் சுக்லபக்ஷத்திலும் வைத்ருதி, வ்யதீபாதம், இவ்விரண்டும் சுக்ல பக்ஷங்களிலும் நேரிடுவதால்,

சுக்லபக்ஷேது பூர்வாண்ஹே சிருத்தம் குர்யாத் விசக்ஷண: ।
கிருஷ்ணபக்ஷே ऽபராண்ஹேது ரௌஹிணம் து ந லங்கயேத் ॥

என்கிற மார்க்கண்டேய வசனப்படி, சுக்கிலபக்ஷத்தில் விஹித சிருத்தத்தை (பூர்வாண்ஹத்தில்) ஸங்கவ காலத்திற்குப் பிறகு 15 நாழிகைக்குள்ளும் செய்யவேண்டும்.

கிருஷ்ண பக்ஷத்தில் விஹிதமான சிருத்தத்தை ஆவர்த்தநத்திற்கு அதாவது (நடுப்பகலுக்கு) பிறகு $1\frac{1}{2}$ முஹூர்த்தத்தில் மூன்று நாழிகைக்குள்ளும் செய்யவேண்டும். (ரௌஹிணம்) என்று சொல்லப்படுகிற 9-வது முஹூர்த்தத்தை தாண்டக் கூடாது என்று வசனம் ஸ்பஷ்டமாய் இருப்பதால் இவ்வாறு சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. கிரஹணம் முதலிய சிருத்தங்களைத்தவிர இதர பார்வண சிருத்தங்களுக்கு குதபம் என்கிற 8-வது முஹூர்த்தத்தை ஆரம்பகாலமாகவும் அபராண்ஹத்தை கர்ம காலமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

விபூதியின் விளைவு.

(ஸாரங்கன்.)

காலை 8 மணி இருக்கும். திண்ணையில் முனகிக்கொண்டும் முனகிக் கொண்டும் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தான் மயன். "ஏண்டாப்பா மயா? என்ன முனகலும் முக்கலும் அமக்களப்படறது? ஏன் இன்னிக்கு உன் தோழங்கள்ளாம் எங்கே போய்டான். இன்னும் பல்லுக்கூட கழுவாமல் கிருத்திகையும் அதுவுமா மூதேவிமாதிரியா படுக்கையைவிட்டு எழுந்திருக்காமகடக்கயே? என்ன உனக்குக் கேடுகாலம்?" என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போனாள் அவன் தயார்.

மயன்:- அம்மா? நான் உயிருக்கு மன்றாடிண்டிருக்கேன். என்னிடம் ஒண்ணும் இப்போ பேசாதே.

தாய்:- ஏண்டா? நீயா உயிருக்கு மன்றாடரே. உன்னிடம் யமன் வரகூடமாட்டான். உன்னைத் தொட்டுட்டு அந்தபாபத்தைத் தொலைக்க அவன் எந்தாருக்குப்போவான்? ஏன்? உனக்குஎன்ன இப்போ வந்திருக்கு.

மயன்:- அம்மா? என்னை ரொம்ப வெய்யாதே? நான் உள்ளத்தை சொல்லிவிடறேன். இந்த வார்த்தைமட்டும் நான் சொல்லாது நிஜம்தான். நேத்திக்கு என் தோழங்களோடு ஒரு மீட்டிங்கிக்குப்போய் பேசிட்டு வந்தேன். வரும்பொழுது பெருத்த மழை வந்துவிட்டது. அதற்காக ஒரு மரத்தடியில் ஒதுங்கினோம். மரத்தின் மேலேயிருந்து ஒருபூச்சிஒன்று மேலே விழுந்தது. விழுந்ததும் சுரீர் என்றது. உடனேசற்றுமயக்கமாக இருந்தது அங்கேயே படுத்து தூங்கிவிட்டேன். எழுந்திருந்து பார்க்கும்பொழுது தோழர்களை ஒருவரையும் காணோம். அப்பொழுது சுமார் ராத்திரி 7 மணி இருக்கலாம். ஒரே இருட்டு. மெள்ள தட்டிதடவிண்டு வீடுவந்துசேர்ந்தேன். கதவெல்லாம் தாளிட்டிருந்தது. திண்ணையிலேயே படுத்துத்தூங்கி விட்டேன். இன்னமும் மயக்கமாகத்தான் இருக்கிறது. நான் என்ன செய்வேன் தேஹம் எல்லாம் ரொம்ப அரிக்கிறது. ஏதாவது ஒரு மருந்து போடேன்.

தாயார்:- மருந்தாவது மாயமாவதுடா! ஏதோ விஷதிஷ்டமாயிருக்கு அதுக்கு விபூதி மந்திரிச்சுப்போடணும். ஒனக்குத்தான் சாமியும் கடையாது பூதமும் கடையாது. விபூதியை உன்கையால் தொட்டு 4 வருஷமாகப் போகிறது. ஒங்கப்பாவைப் பார்த்தா உள்ளங்காலேர்ந்து உச்சந்தலை வரை விபூதியும் ருத்ராக்ஷமுமா அப்படியே தேஜஸ் ஜ்வலிக்கும். உன்னைப் பார்த்தா பாஷாண்டிமாதிரியா இருக்கு எற்கனவேயே பாழுநெத்தியும் அதுவுமாபவஷ்சொட்டாது போராக்குறைக்குகொஞ்சநாளா ஒருசட்டையை ஒண்ணையும் போட்டுக்க ஆரம்பிச்சுட்டே வடக்குத்தெரு சங்கர அண்ணக் கிட்டே ஒரு தடவை விபூதி மந்திரிச்சு போட்டுகிண்டா எப்பேர்ப்பட்ட விஷமும் பறந்து ஓடிவிடும். உன்தலையிலே இழுத்து எப்படியோ அப்படித்

தானே நடக்கும். நீ எப்படியாவது போ. அதோ உன் தோழர்கள் எல்லாம் வரான். அங்க சொல்லரதைக்கேளு. சீக்கிரமா சொன்னபடி செய்துடுவான்

"என்னடா? மய? நேற்று சாயங்காலம் வெகுநேரம் மரத்தடியில் காத்துக்கொண்டிருந்தோம். உனக்கு மயக்கம் தெளியலே இல்லே. சூரியனும் மலைவாய்க்கு சென்று விட்டான். எங்களுக்கு மிகவும் பயமாக இருந்தது. நாங்கள் வந்துவிட்டோம். பிறகு எப்படி வீடுவந்து சேர்ந்தாய்? இப்பொழுது உடம்பு கொஞ்சம் சௌரியமாக இருக்கிறதா? இன்று சாயங்காலம் கூட்டத்திற்கு வரமுடியுமா? உன்னைத்தான் கூட்டத்திற்குத் தலைவன் என்று நோட்டீசில் கண்டிருக்கிறோம்" என்றான் நண்பர்களுள் ஒருவன்.

மயன்:- அடே அஸத்துக்களா? இனி என் வீட்டு வாசலில் ஏறக்கூடாது? கூட்டம் போடறோணும், சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறோணும்? ஆளைப்பாரடா. எனக்கு உடம்புமட்டும் சொஸ்தமாக ஆகட்டும். உங்கள் சங்கத்தையும், பிரசாரத்தையும் இருக்கின்ற இடம் தெரியாமல் செய்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

இதைக்கேட்டதும் தோழர்கள் விசனத்துடன் விரைந்தோடி விட்டார்கள். அந்த கோஷ்டியில் மயனே மிகவும் படித்தவன். சொல் வன்மையுள்ளவன். எந்தவிஷயத்தையும் உணர்ச்சியுடன் பேசி அனைவருடைய மனதையும் மாற்றும் திறமை வாய்ந்தவன். அவன் இம்மாதிரிக் கூறியதும் மற்றவர்களுக்கு இனி என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை.

மயனுடைய தாயார்:- ஏண்டா? பல் தேச்சையோ இல்லையோ. உள்ளே வந்து காப்பியைக் கொட்டிக்கோயேன். சீக்கு வந்து கீழேவிழுந் துட்டா, அப்போ உன்னைக்காக்க தெய்வந்தான் வேணும். நீ என்ன வெய்தாலும் அவருக்கு உன்னைக்கைவிட மனம்வராது. நான்சொன்னதை ஒண்ணையும் நீ கேட்கிறதில்லை. அதுமட்டுமா? பல ஸந்தர்பங்களில் என்னை திட்டவும் திட்டுகிறாய். இருந்தாலும் உனக்கு சோருபோட வேண்டாம்னு எனக்குத்தோணுகிறதா? இல்லை. ஐயோ? இவ்வளவு நேரம் ஒன்றும் சாப்பிடாமல் இருக்கிறாயே என்று பெற்றவயிறு துடிக்கத்தான் துடிக் கிறது உம்......... இனியாவது உனக்கு நல்லபுத்தி வருமா?

மயன்:- அம்மா? நான் இவ்வளவுநாள் செய்ததெல்லாம் தவறு. இனி நீ சொல்லுகிறபடியே நடக்கிறேன். எப்படியாவது தேஹத்திலுள்ள அரிப்பையும், மயக்கத்தையும் மாற்றவேண்டும். அதற்கு என்னசெய்யலாம் சொல் கையைப்பாரேன். காலைப்பாரேன் ஐய்யயோ? எங்கு பார்த்தா லும் ஒரேதரிக்கா தடித்துவிட்டதே? என்செய்வேன்? அம்மா? அம்மா? நான் இனி பிழைப்பேனா. எனக்கு ஒன்றும் புரியவில்லையே?

தாயார்:- அசடே? பயப்படாதே. ஆற்றில்போய் ஸ்நானம் செய்து விட்டு வந்து பட்டை பட்டையாக விபூதியைப் போட்டுக்கோ. விபூதியைத் தொட்டு நாலுவருஷம் ஆயிடுத்து. பெரியவாளை ஏசினாய், தெய்வத்தைத்

தூற்றினாய். அதெல்லாம் எங்கேபோகும். தேஹத்திலே வந்திருக்கு. இப்பவும் ஒன்றும் குடிமுழுகிப்போய்விடல்லே. சங்கர அண்ணாகிட்டே போய் மரியாதையா நமஸ்காரம் பண்ணிட்டு தேஹத்திலிருப்பதைச் சொல்லி விபூதி கொடுங்கோன்னு சொல்லு. ஒருதரம் அவர் கையால் விபூதி போட்டால் எல்லாம் சரியாய் போய்டும்.

மயன்:- அம்மா? விபூதியில் என்ன இருக்கு. இதெல்லாம் வெரும் மூடநம்பிக்கை. விபூதி போடுகிறதாவது வீக்கம் போய்விடுகிறதாவது. நம் முன்னோர்கள் எல்லாம் விஷயம்தெரியாமலே ஏதோ சில காரியங்களை செய்து வந்திருக்கிறார்கள். ஆதலால்தான் அவர்களைத்தூற்ற வேண்டி யிருக்கிறது.

தாயார்:- போரும், போரும். வாயைமூடு. இன்னும் சீக்கு அதிக மாய்டும். விபூதியில் என்ன இருக்கா? என்ன இல்லை? நேத்திராத்திரிதான் தெற்குத்தெருவில் புராணம் கேட்டுட்டுவந்தேன். நீ, தானாகவும், படிக்கிற தில்லே, ஒருவர் சொல்லியும் கேட்கிறதில்லை. விபூதியின் மஹிமையைப்பற்றி நேத்திச் சொன்னார் சொன்னார், அப்படியே சொன்னார். விபூதிக்கு "பவிதம்" "பஸ்ம" "பூதி" "ரக்ஷா" என்றெல்லாம் பெயராம். விபூதியை இட்டுக்கொண்டாலே உடலுக்குத் தனிப்பிரகாசமாம். ஆதலால் அது "பவிதமாம்" ஸமஸ்த பாபங்களையும் பக்ஷிப்பதால் "பஸ்மாவாம்" ஐச்வர்யங்களையும் அளிப்பதால் "பூதி" எனப்படுகிறது. அனைவரையும் காப்பாற்றுவதால் "ரக்ஷா" எனப்படுகிறதாம். இவ்விதம் லக்ஷணம்கூறி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதை சொல்லி விளக்கினார். சபையில் இருந்த அனைவரும் பரவசமாகிவிட்டார்கள். ஒருவிஷயம் சொல்லுகிறேன் கேள். அக்காலத்தில் நெற்றியில் விபூதியோ, நாமமோ இல்லாதவர்களை பார்க்கவே முடியாது. தற்காலம் விபூதியும் நாமமும் உள்ளவர்களைப் பார்க்கவே முடியவில்லை. அதற்குத்தகுந்தாற் போல்தான் இருக்கு வாழ்வு. சோருகிடையாது, துணிகிடையாது, ஜலங்கூடக்கிடையாதாம். என்னவேண்டியிருக்கு. ரோகம், பாபம், வியாதி, வறுமை, திருட்டு எல்லாவற்றையும் விபூதி அகற்றிவிடும். பாபங்களை அழித்து பரமேச்வரனை ஞாபகப்படுத்துவதாலும் அதற்கு "பஸ்ம" என்று ஒரு பெயராம்.

கொடிய அரக்கன் ஒருவன் பசியின் கொடுமையால் சிவபக்தன் ஒருவனைக்கொன்று தின்று விடுகிறது என்ற எண்ணத்துடன் அவனைப் பாய்ந்து பிடித்தானாம். சற்று நேரத்திற்கெல்லாம் அவனுக்கு ஏதோ ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. உடனே அவனைக்கீழே விட்டுவிட்டு மூன்றுதடவை பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரம் செய்தான். 'யாரப்பா" நீ,, என சிவ பக்தர் வினவ, ஸ்வாமி 25 ஜென்மங்களுக்கு முன் துர்ஜயன் என்ற ஓர் அரசனாக இருந்தேன். அக்காலத்தில் தயவு தாக்ஷிண்யமின்றி குடிகளைத் துன்புறுத்திவந்தேன். செய்யத்தகாத பலகொடிய காரியங்களைச்செய்தேன் அதன்பயனாக இதற்குமுன் 24 பிறவிகளில் விலங்குகளாகவும், பறவை களாகவும்பிறந்து இக்கடைசிப்பிறவியில் அரக்கனாகத்தோன்றி எப்பொழுதும்

கடும்பசியால் வாடிவதங்கிக் கொண்டிருந்தேன். இப்பொழுது தங்கள் உடலைத்தொட்டதும் இதற்கு முன் ஜென்மத்தில் நான் அனுபவித்தது எல்லாம் ஞாபகத்திற்கு வந்து விட்டது. எப்பொழுதும் இல்லாத ஓர் சாந்தி என்மனதில் குடிகொண்டிருக்கிறது. தாங்கள்யார்? ஒருக்கால் ஈச்வரனுடைய அவதாரமோ? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? இவ்வளவு மகிமை தங்களுக்கு எப்படி ஏற்பட்டது? கிருபை புரிந்து அதை எனக்கு தெரிவிக்கவேண்டும், எனக்கூறினன் அந்த அரக்கன்.

சிவபக்தர்:- அப்பா! எனக்கு யாதொரு மகிமையும் கிடையாது. நான் இடைவிடாமல் தரித்துக்கொண்டுவரும் விபூதிக்கே இந்த மகிமை அதை எடுத்துரைக்கயாராலும் முடியாது. ஸாக்ஷாத் பரமேச்வரனாலேயே எடுத்துரைக்க முடியுமோ! முடியாதோ சந்தேகந்தான் எனக்கூறினாராம். என்ன விபூதியின் மகிமை பார்த்தாயா!

மயன்:- அம்மா? அப்படியா? இவ்வளவு நாளாக இம்மாதிரி விஷயங்கள் ஒன்றையும் தெரிந்துகொள்ளாமல் என் ஜென்மத்தை வீணாக்கிக்கொண்டுவிட்டேன். இப்பொழுது என்வியாதி சொஸ்தமாகஆனதும் இவற்றையெல்லாம் நன்றாக கற்றுணர்ந்து தீவிரப்பிரச்சாரம் செய்து யுக்திக்கும், அனுபவத்திற்கும், சாஸ்திரத்துக்கும் ஒற்றுவராத நாஸ்தீகத்தை ஒழித்தேகட்டுகிறேன்.

தாயார்:- சரி சரி, முதலில் சங்கரண்ணாவிடம் விபூதியைப்போட்டுக்கொண்டுவா: பிறகு உன்வீரமான பேச்செல்லாம்பார்த்துக்கொள்வோம். எனக்கூறி நெற்றியில்கொஞ்சம் விபூதியை இட்டுமயனை அனுப்பிவிட்டாள்.

மயன் ஆற்றில்போய் ஸ்நானம் செய்துவிட்டு தாயார்சொன்னபடியே விபூதியை பட்டை பட்டையாகப் போட்டுக்கொண்டு வெண்பட்டைக் கட்டிக்கொண்டு நேராக வடக்குத்தெரு சங்கரஅண்ணா வீட்டிற்குச்சென்றுகொண்டிருக்கையில் மத்தியில் பல நண்பர்களைச் சந்தித்தான். அவர்கள் எல்லோரும் ஏதோ இவனிடம் பேச்சுக்கொடுத்துப் பார்த்தார்கள் ஆனால் மயன் யாருடனும் இனி சாவகாசம் வைத்துக்கொள்வதில்லை என்ற உறுதியுடன் யாருக்கும் முகங்கொடுக்காமல் சென்று விட்டான்.

சங்கரஅண்ணா என்பவர் ஓர் சிறந்த மந்திரவாதி. மிகவும் ஆசாரசீலர். பஞ்ச பஞ்ச உஷ: காலத்தில் ஸ்நானம் செய்யத்தவறமாட்டார். விபூதியும் ருத்ராக்ஷமும், அம்பாளுக்கு அர்ச்சனை செய்த குங்குமமும் எப்பொழுதும் அவருக்குத்தனி சோபையை அளித்துக்கொண்டே இருக்கும். பூர்ணமாக வேதாத்யயனம் செய்தவர். சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவர். ஸ்ரீசக்ரபூஜை, வைச்வதேவம் இவை யில்லாமல் புசிக்கவேமாட்டார். பெரும்பாலும் அவருடைய ஜபதபங்கள் எல்லாம் முடிய பிரதிதினம் பகல் 1 மணி வரையில் ஆகும். காலை 9 மணி முதல் 1½ மணிவரை மந்திரிக்கும் பழக்கம் வைத்துக்கொண்டிருந்தார். விஷதிஷ்டம், வியாதி, ஏவல், பிசாசு எல்லாம் அவரிடம் மூன்றே பொழுதில் நீங்கிவிடும். யாராவது அதற்காக ஏதாவது பணம் கொடுத்தால் அதைவிஷமெனக்கருதுவார். (தொடரும்)

சிறுகதை

ஏட்டுச்சுரைக்காய்.

ஓர் ஊரில் நான்கு மாணவர்கள் சேர்ந்து பள்ளிக்குச்சென்று படித்து வந்தார்கள் அவர்களுடைய ஊருக்கும் பள்ளிகூடமிருக்கும் நகரத்திற்கும் இரண்டு மைல்கள். பிரதிதினம் காலையில் 8 மணிக்கு நால்வரும் சேர்ந்தார்போல் புறப்பட்டு, புஸ்தகப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு அவ்வூர் கீழ்க்குளத்தங்கரையிலுள்ள பிள்ளையார்கோவிலுக்குச்சென்று பிள்ளையாரை கும்பிட்டுவிட்டு 12 தோப்புக்கரணங்களுக்காவது குறையாமல் போட்டு விட்டுத்தான் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுவார்கள். அந்நால்வர்களுள் ஒருவன் அவன் வீட்டில் மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டுவந்தான். பிரதிதினம் பிள்ளையார் கோவில்வரை வந்து, அவன் தாத்தா "எலே? பசங்களா! பள்ளிக்கூடத்தில் ஒங்கபடிப்புண்டு நீங்கள் உண்டு, என்று இருக்கணும். வேறே அங்கே இங்கேனு நிக்கக்கூடாது. பள்ளிக்கூடம் விட்டாச்சுனு நேரே ஆத்துக்கு வந்து சேரணும். 100க்கு 100 மார்க்கு வாங்கணும். சொல்லிப்பிட்டேன்." என்று சொல்லி விட்டுத்திரும்புவார். அவர் பேரன் சரியாக படிக்கவேண்டுமென்பதற்காக, மற்ற பையன்களுடைய தகப்பனார்களையும் ஒருநாள் சந்தித்து "இந்தநாள் படிப்பு ரொம்ப கெட்டிருக்கு. வீண்தண்டச்சம்பளந்தான் உருப்பட்ட படிப்பு ஒன்றையும் காணோம். உங்கள் பையன்களை ஜாக்கிரதையாக கவனிச்சுக்குங்கோ ஏதோ நாலும் சேர்ந்து போறது. ஒழுங்கா இருந்துன்னா எல்லாத்துக்கும் நானே பள்ளிக்கூட சம்பளத்தை கொடுத்துடலாம்னு நினைக்கிறேன். போகப்போகப்பாப்போம்' எனக்கூறினர்.

மற்றமூன்று பையன்களுடைய பெற்றோர்களும் அஹன்யஹனி காலக்ஷேபமாகையால் அக்கிழவர் சொன்னபடியே பள்ளிக்கூடசம்பளத்திற்காசைப்பட்டு தம்தம்பையன்களை பெரியாத்துப்பையன் விருப்பப்படியே நடந்து கொள்ளும்படி கண்டித்துவைத்திருந்தார்கள். அந்த நால்வர்களும் சொல்லிக்கொடுத்த பாடத்தை உருப்போட்டுத் தள்ளுவதில் புலி. அதைத்தவிர வேறு எதைக்கேட்டாலும் பூஜ்யந்தான். ஒருநாள் 5 வது பாரம் இங்கிலீஷ் டீச்சர் பெரியாத்துப் பையனைப் பார்த்து "தற்காலம் கவர்னர் ஜனரலாக இருப்பவர் யார்? என்று ஒரு கேள்வியைக் கேட்டார். பையன் மேலும் கீழும் பார்த்துக் கொண்டே இருந்தான். வாயைத் திறக்கவே இல்லை தெரியுமா? தெரியாதா? எனக்கடிந்தார் டீச்சர். உடனே விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டான், சரி, சரி உட்க்காரு" என ஒருவாறு ஸமாதானப்படுத்தினர் டீச்சர். இந்த ஸம்பவம் நடந்து இரண்டு தினங்களுக்கெல்லாம் சங்கராந்தி வந்தது. அன்று பெரியாத்துக்குச் சென்று குசலப்பிரச்சனம் செய்கிறவர்களுக்கெல்லாம், ஒரு சீப் வாழைக்காய், 2 சீப்ப வாழைப்பழம், ஏதோவீட்டிலுள்ள கறிகாய், கருப்பங்கழி 1,

இஞ்சிக்கொத்து, மஞ்சக்கொத்து 4 தேங்காய்கள் இவைகளையெல்லாம் அப்பெரியாத்துக்கிழவர் கொடுப்பது வழக்கம். இதையறிந்த ஸேவதாபாரம் டீச்சரும் சங்கராந்தியன்று காலை 8 மணிக்கெல்லாம் அக்கிழவர் வீட்டுக்குச் சென்றார். வாரும் டீச்சர் வாள்! வாரும். என அக்கிழவர் டீச்சரை அழைத்தார். டீச்சருக்கு அக்கிழவருடைய த்வனியைக் கேட்டதுமே "சரி இன்று நாம் நல்ல முகத்தில் முழிக்கவில்லை" எனத் தோன்றி விட்டது.

கிழவர்:- என்னையா? புஸ்தகத்தில் இல்லாத விஷயங்களைப் பற்றி சிருசுகளைக் கேட்டால் அதுகள் என்ன பண்ணும். நீங்கள் சொல்லிக் கொடுக்கிற ஒழுங்கு இதுதான் போலிருக்கு. ஊர் வம்பெல்லாம் படிக்கிற பையனுக்கு என்னத்துக்கையா? யார் கவர்னர் ஜனராலாக இருந்தால் என்ன? யார் மந்திரியாக இருந்தால் என்ன? இந்த நாளப் படிப்பே இப்படித்தான். அது உருப்படவே உருப்படாது. உம். யாரடா அது. ஒரு சீப்பு வாழைப்பழத்தைக் கொடுத்து இவரைப் போகச்சொல்லடா.

டீச்சர் பதில்பேசாமல் மெள்ளமாக வீடுபோய்ச் சேர்ந்தார். அந்த வருஷத்தோடு அந்தநான்கு பையன்களும் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திவிட்டு ஸம்ஸ்கிருத காவ்யங்களை படித்து அவற்றில் நல்லதேர்ச்சி பெற்றுவிட்டார்கள். எப்பொழுதும் நால்வரும் கூடி ஸம்ஸ்கிருத சுலோகங்களைச் சொல்லுவதும் அவற்றின் பொருளைப்பற்றி சர்ச்சை செய்வதுமாக இரண்டொரு வருஷங்களைக் கழித்தார்கள். ஏழைப் பையன்களுடைய தாய், தந்தையர்கள் "வயஸு குட்டிச்சுவரு மாதிரியா ஆது காலணா ஸம்பாதிக்கத் துப்பில்லே. என்ன பண்ணறது. பெரியாத்துப் பையனோடே சேர்ந்து நம்மாத்துப் பிள்ளைகளும் உருப்படலே" என அடிக்கடி கூறிக்கொண்டே இருந்தார்கள். ஒரு ஸமயம் பக்கத்து நகரத்திலுள்ள பெரிய கோவிலில் பிரம்மோத்ஸவம் வந்தது. அதற்குப் போய்வர கிழவரிடம் நான்கு பையன்களும் அனுமதி கேட்டார்கள்.

கிழவர்:- என்டா பசங்களா? நீங்கள் இவ்வளவுநாளாக வெளிலே வாசல்லே போனது இல்லே. இப்போ தனியாகபோய்ட்டு ஒழுங்கா திரும்பி வரணுமே தைரியமிருக்கா?

பையன்கள்:- நாங்கபோய்ட்டு வரந்தாத்தா. நாங்க நாலுபேருஞ் சேர்ந்து ஏதாவது சம்பாதிக்க வேணும்னு கொஞ்ச நாளாக எங்களுக்குத்தோணிண்டு இருக்கு அதற்கு நீங்க ஆசீர்வாதம்பண்ணணும்.

கிழவர்:- சரி, சரி, ஸம்பாதிக்கிறது கிடக்கட்டும். உத்ஸவத்திற்கு போய்டு ஒழுங்கா திரும்பிவாருங்கோ பார்போம்.

அப்படியே ஆகட்டும் எனக் கூறிவிட்டு நால்வரும் கிளம்பி விட்டார்கள். கொஞ்சதூரம் சென்றதும் ஓர் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டுஎந்தவழியாகச்செல்லலாம் என்று ஆலோசித்தார்கள். அந்த

சமயம் சமீப கிராமத்தில், தனிகர் ஒருவர் இறந்து விட்டார். அவரைத் தூக்கிக்கொண்டு ஏராளமான ஜனங்கள் ஸ்மசானத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தைப்பார்த்ததும் நால்வருள் ஒருவன் "மஹாஜனோயேனகத:ஸபந்தா:" கூட்டம் எவ்வழியாகச் செல்லுகிறதோ, அநேகம்முடைய மார்க்கம் எனக் கூறினான். உடனே நால்வரும் அக்கூட்டத்தோடு ஸ்மசானத்திற்குச்சென்றார்கள்.

(மேல் கூறிய வாக்யத்தின் உண்மைப்பொருள் பெரியோர்கள் எவ்வித ஆசாரத்தைக் கைகொள்ளுகிறார்களோ, அந்த ஆசாரமே இஹத்திலும் பரத்திலும் நமக்கு நன்மையை அளிக்கக் கூடியது என்பதுதான். உலக அனுபவம் இல்லாததால் மேற்படி பையன்கள் இதற்குதப்பர்த்தம் செய்து கொண்டு விட்டார்கள்.) அங்கு அர்மாத்தடியில் கழுதை ஒன்று நின்று கொண்டிருந்தது. அதைக்கண்டதும ஒருபையன் 'ராஜத்வாரே ஸ்மசானே ச யஸ்திஷ்டதி ஸ பாந்தவ:' அரண்மனையிலும், ஸ்மசானத்திலும் எவன் நிற்கிறானோ அவனே பந்து என உரைத்தான். உடனே ஒருவன் ஓடி அக்கழுதையின் கழுத்தைக் கட்டிக்கொண்டான். மற்றொருவன் ஜலத்தைக் கொண்டுவந்து அதன் கால்களைக் கழுவினான்.

(இதன் சரியான அர்த்தம்- "அரசனுக்கு எதிரில் ஓர் வழக்கில் சம்மந்தப்பட்டு நிர்குணகாலத்தில் உதவி புரிகிறவனும், சவத்தைக் கொளுத்த ஸ்மசானம் வரைவந்து உதவி புரிகிறவனுந்தான் பந்து" என்பது.)

அவ்விதம் அவர்கள் செய்து கொண்டிருக்கும் பொழுது அங்கு வெகு வேகமாகச்சென்று கொண்டிருக்கும் ஓர் ஒட்டகத்தைப்பார்த்தார்கள். அப்பொழுது ஒருவன "தர்மஸ்ய த்வரிதா கதி:" எனக் கூறப்பட்டிருப்பதால் இந்தப் பிராணி வெகு வேகமாகச் செல்லுவதால் இதுதான் "தர்மம்" என்றான் இதன் சரியான கருத்து (தர்மம் நிச்சயமாக விரைவில் பயனை அளித்தே தீரும் என்பது) உடனே மற்றொருவன் இஷ்டம் தர்மேண யோஜயேத் தனக்குவேண்டியவனை தர்மத்தோடு சேர்த்து வைக்க வேண்டுமென நூல்கள் கூறுவதால் நம்முடைய பந்துவான இக்கழுதையை ஒட்டகத்தின் கழுத்தில் கட்டிவிடுவோம் என்றான். உடனே அவ்விதமே அவர்கள் செய்ய அதைக் கேள்விப் பட்டவண்ணான் அவர்களை "நன்றாகப்புடைக்க வேண்டும்" என்ற எண்ணத்துடன் விரைந்தோடி வந்தான். அவனைக்கண்டதும் அந்த நால்வர்களும் ஓடிவிட்டார்கள்.

இதற்குள் மாலை மணி 4 ஆகி விட்டது. பசி தாங்கமுடியவில்லை சமீபகிராமத்திற்கு சென்றதும் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவனை போஜனத்திற்கு அழைத்தார்கள். ஒரு வீட்டில் நெய்யில் செய்த கருவடாத்தை இலையில்பரிமாறினார்கள். அங்கு சென்ற பையன் அதைத் தொடாமலேயே இங்கு மங்கும் பார்த்தான். ஏதோ ஆழ்ந்த ஆலோசனையில் ஈடுபட்டான். சற்று நேரத்

திற்கெல்லாம் சாப்பிடாமலே எழுந்து ஓடிவிட்டான். அவ்வீட்டுக்காரர் அவனைத்தொடர்ந்து வந்து ஏன் இப்படி? என்று கேட்கவே "தீர்க ஸூத்ரீ விநச்யதி" என்றான். கருவடாம் நீளமான கயிறு போல் இருந்தது. அதைப்புசித்தால் மேற்கூறிய வசனப்படி அவன் நசித்துவிடக்கூடுமெனக் கருதினேன். வாஸ்தவத்தில் விரைவில் செய்யக்கூடிய காரியத்தை வெகுநேரம் வளர்த்தினால் அழிந்துவிடுவான் என்பது அதன் பொருள்.

மற்றொருவீட்டில் புசித்தவன் இலைநிறைய வடையுடன் தயிரைப் பரிமாறினார்கள். அதைக்கண்டதும் எழுந்திருந்து விட்டான். "அதிவிஸ்தார விஸ்தீர்ணம் தத் பவேந்ந சிராயுஷம்" விஸ்தாரமாக இருக்கும் வஸ்துவைப்புசித்தால் ஆயுள்குறையும், எனக்கருதினேன். உண்மையில் "அதிகநேரம் புசித்துக்கொண்டே இருந்தால் ஆயுள்குறையும்,, என இதன் ருஜுவான அர்த்தம்.

மற்றொருவனுடைய இலையில் வடையைப் போட்டார்கள். அதில் த்வாரம் இருந்தது. "சித்ரேஷ்வநர்த்தா பஹுலீபவந்தி"

த்வாரமுள்ள வஸ்துக்களில் துன்பங்கள் அதிகம் என்ற சுலோகம் ஞாபகத்திற்கு வரவே; சாப்பிடாமலே எழுந்திருந்து விட்டான் "ஆபத் காலங்களில் துன்பங்கள் அடுத்தடுத்துவரும்" என்பது இதன் வாஸ்தவார்த்தம்.

பெரியாத்துப்பையன் யாரையும் கண்டு பேசத்துணியாமல் மற்ற மூவர்களும் புசித்துவிட்டு வரும் வரை கிராமத்திற்கு வெளியிலேயே நின்று கொண்டிருந்தான். மற்ற மூவர்களும சாப்பிடாமலேயே திரும்பிவரவே பசிபசியென்று பறந்து கொண்டு மறுநாள் காலை பத்து மணிக்கு வீடுவந்து சேர்ந்தார்கள். ஆதலால் லோகாநுபவம் இல்லாதவர்கள் எவ்வளவு படித்தாலும் பயனில்லை

எட்டிச்சுரைக்காய் கறிக்காகுமா?

(23-ம் பக்கம் தொடர்ச்சி)

மநு. இவற்றிற்கெல்லாம் இடங்கொடாமல் மனைவியை காக்க வேண்டும்

கல்வியைக்கற்ற பிறகு சீடர்கள் ஆசிரியர்களையும், மனைவியை அடைந்த பிறகு தாயையும் காம உணர்ச்சி அற்றவன் மனைவியையும், காரியம் முடிந்த பிறகு அக்காரியத்திற்கு உபசரித்தவனையும், சமுத்திரத்தைக் கடந்த பிறகு கப்பலையும், வியாதி சொஸ்தமான பிறகு வைத்தியர்களையும், பெரும்பாலும் பலர் அலட்சியம் செய்கின்றார்கள். அது முற்றிலும் தவறு. ஒருவர் செய்த உபகாரம் சொல்பமானாலும் அதை எந்நாளும் மறக்கலாகாது.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

भूयसीरपि कलाः कलङ्किताः प्राप्य कश्चिदपचीयते शनैः ।
एकयापि कलया विशुद्धया योपि कोपि भजते गिरीशताम् ॥ (2)

பூயஸீரபி கலா: கலங்கிதா:ப்ராப்ய க:சிதபசீயதே சநை: I.
ஏகயாபி கலயா விசுத்தயா யோபி கோபிபஜதே கிரீசதாம் II.

கல்மஷத்தோடு கூடின (சுத்தமில்லாத) பல கலைகளைப் பெற்றும், சந்த்ரன் போன்ற ஒருவன் களங்கத்துடன் எல்லாக் கலைகளுடனும் கூடியவனாயினும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறான்; மற்றொருவரோ வென்றால், களங்கமற்று அத்யந்த ஸுத்தமான ஓர் கலையை (பிறையை) மௌளியில் தரித்து அதனால் கைலாஸ கிரிக்கதிபதியாகிய கிரீசராகிறார். 'கிரி (வாக்கில்) ஈசனாக' ஆகிறார்.

ஆங்கிலத்தில் Jack of all trades but master of none, என்று பழமொழி. ஓர் கலையை முழுவதும் கசடறக்கற்கையே லோகோத்தரமான உயர்த்தியைத்தரும். அதிலும் விசுத்தமான கலை 'அத்யாத்மவித்யாவித்யானாம்' என்று பகவானாலும் கொண்டாடப் பட்ட ஆத்மவித்தையை. 'ஸாவித்யா யாவிமுக்தயே', 'மோக்ஷமென்னும் ஸர்வோத்க்ருஷ்டமான பயனைத்தரும் வித்யையே வித்யையாகும்'. மற்றவையெல்லாம் 'அவித்யை' என்றும் ஒருவாறு சொல்லலாம். வேதங்களுக்கு மற்றவித்யைகளெல்லாம் அங்கமாகும். "வேதாங்கங்களைப்போல மற்ற வித்யாஸ்தானங்களும் வேதாந்தங்களுக்கு உபகாரகமான அங்கமாகும் என்று சொல்லலாம். வேதாந்தத்தைப்ரமாணராஜமென்பர். ஈச்வரனுக்கு 'ஸர்வக்ஞர்' என்று அமரகோசப்படி திருநாமம். 'விச்வாசார்யா: விதிசிவமுகா:' என்று தயாசதகத்தில் 'ஈச்வரரை விச்வாசார்யர் என்று கூறப்பட்டது. 'ஈச்வராத் ஞாநமந்விச்சேத்' 'ஞானத்தை ஈச்வரனிடமிருந்து பெறவேணும்' என்று ஸ்ம்ருதி.

स्वबलेन हन्त मनसो निवर्तनं
बिसतन्तुनेव सुरदन्तियन्त्रणम् ॥ (3)

ஸ்வபலேந ஹந்த மநஸோ நிவர்த்தநம்
பிஸதந்துநேவ ஸுரதந்தியந்த்ரணம் II,

தன்ப்ரயத்நத்தினாலே மட்டும், தன் பலத்தை மாத்திரம் கொண்டு மனதைப்பல விஷயக்காடுகளில் ஓடி ஸஞ்சரித்துக் கொண்டேயிராமல் திருப்புவது (திருப்பி உள் ஆத்மாவில் நிறுத்துவது) தாமரை நூலால் (ம்ருணாள ஸூத்ரத்தால்) மத்தமான ஐராவதத்தை கட்டுத்தறையில் கட்டிப்போட்டு அடக்கி நிறுத்த முயல்வது போலாகும்; இந்திரியங்களையும் மனதையும் வசப்படுத்துவதற்கு ஈஸ்வரன் அனுக்ரஹமும் ஆசார்யன் அனுக்

முன்காட்டிய ச்லோகத்திற்கு அடுத்த ச்லோகமிது. ஒருவனுடைய பாக்யவசத்தால் மாசற்றவரும், கருணை முதலிய மங்கள குண பரிபூர்ணருமான ஆசார்யாரை நெருங்கப்பெற்று அவருடைய அம்ருதத்தைப்பெருக்கும் கடாக்ஷங்களால் நனைக்கப்பட்டால், ஸம்சயம், விபர்யயம், கல்மலங்கள் முதலிய அசுத்தங்களேயில்லாத, மிகவும் சுத்தமான ஞானம் முதலிய சிறந்த ஸம்பத்துக்கள் அவனுக்குக் கிடைத்து அவன் இந்த தேஹத்தோடிருக்கையிலேயே பிறகு மோக்ஷத்தில் அநுபவிக்கப்போகும் ப்ரஹ்மானந்தாநுபவங்கள் இங்கேயே முளைவிட்டு அவனை ஆனந்தத்தில் மூழ்கச் செய்யும். 'அத்ர ப்ரஹ்ம ஸமச்நுதே" என்று ச்ருதி.

ஹ்ருதயத்திலுள்ள காமாதி தோஷங்கள் நீங்கினபிறகு மானிடனும் முக்தன் போலாகிறான். இங்கேயே ப்ரஹ்மாநுபவத்தில் மூழ்கி இன்புறுகிறான். இங்கே அநுபவிக்கும் மோக்ஷானந்தம். 'அநுபோக்ஷ்ய' 'சரீரம் விழுந்து முடிவு ஸம்ஸ்காரம் செய்து கழியுமுன்வரும் மோக்ஷாநந்தம் போன்ற ஆனந்தம், என்று ஸூத்ரகாரர் 'அம்ருதத் வம்ச அநுபோக்ஷ்ய, என்று காட்டினார். 'தேஹிந:', 'தேஹத்திலிருப்பவனுக்கு, என்று இங்கே பேசுவது அதைக் காட்டுகிறது. சாந்தோக்ய உபநிஷத்தின் ஸத்வித்யையில் 7-வது த்ருஷ்டாந்தத்தில் தன்னூர் சேர்வதற்கு வழி தெரியாமல் திகைப்பவருக்கு வழி தெரிந்தவர்கள் கருணையால் வழிகாட்டி வீடுசேரும்படி சொல்வதைக் காட்டி 'ஆசார்யவாந் புருஷோவேத' 'உயர்ந்த ஆசிரியருடைய அருகில் வஸித்து அவர்கள் ஞானம், சீலம் முதலிய வற்றைப் பெறுகிறவருக்குத்தான் ப்ரஹ்ம ஞானம் ஸித்திக்குமென்று விளக்கிற்று. அப்படி ஆசார்யனுடைய கடாக்ஷங்களும் ஞானோபதேசமும் கிடைத்து ப்ரஹ்மத்தின் காட்சி போன்ற இன்ப அநுபவம் முளைவிடுகையிலேயே அவனுக்கு மோக்ஷம் ஸித்தமாய் விட்டதென்றும், ப்ராரப்த கர்மமும், அதனால் வந்த தேஹமும் கழிந்த பிறகு பரிபூர்ண மோக்ஷாநந்தம் கைகூடுமென்பதையும் காட்டிற்று. இங்கே 'விதிவசாத், என்று கூறியது உபநிஷத்பாஷ்யத்தில் 'கதஞ்சிதேவ புண்யாதிசயாத், என்றும் 'தேநசம்ரஹ்மவிதா காருண்யாத்' என்றும் பகவத்பாதருரை.

सतः सत्त्वविहीनानां सत्त्यैवापराध्यतः ।
कथङ्कारं प्रतीकारः कल्पकोटिशतैरपि ॥ (6)

ஸத: ஸத்வ விஹீநாநாம் ஸத்தயை வாபராத்த்யத: I.
கதம்காரம் ப்ரதீகார: கல்பகோடி சதைரபி II.

மந்மதனைநோக்கி- 'தோஷங்களான காமன், க்ரோதன் முதலிய மஹாமோஹர் படைகள் வைராக்யம், க்ஷமை முதலிய விவேகர் படைகளோடு ஸமாதானம் செய்து கொண்டு, எதிரிகளும் நாமும் உயிரோடிருந்து ஸுகமாக வாழக்கூடாதா, என்று கேட்டாள். அதற்கு மன்மதன் சொல்லுகிறான்- 'அறியாதவளே, ஒருவருக்கொருவர் ஜந்மசத்ருவான குணதோஷங்களிரண்டும் எப்படி ஒரே ஜீவனுடைய மனதில் கூடியிருந்து வாழமுடியும்! குணங்களும் தோஷங்களும் ஒருஜீவனுடைய மனதிலேயே சேர்ந்து வாழ்வதெப்படி. 'காமம், என்பது பெண்விஷயமான மோஹம்; 'வைராக்யம். ப்ரஹ்மசர்யம், என்பது அதில்லாமலிருப்பது. காமியாகவும், விரக்தமாகவும் ஒருவன் மனதேஇருக்கமுடியுமோ? கோபஸ்வபாவமும் பொறுமை ஸ்வபாவமும் ஒருவன் மனதிலேயே எப்படிச் சேர்ந்துவாழமுடியும்; கோபஸ்வபாவமென்பது பொறுமையில்லாமை; பொறுமையென்பது கோபமில்லாமை. ஒன்றின் இல்லாமையே மற்றொன்று. ஒன்றின் பாவமும் அபாவமும் ஒன்றுகூடி எப்படி ஓரிடத்தில் வஸிப்பது? ஒன்றைக் கொல்லாமல் மற்றொன்று ஜீவிக்கவே முடியாது. ஆகையால் ஸமாதானமென்பது ஸாத்யமானதல்ல வென்று மன்மதனே விளக்குகிறான். (No compromise between virtue and evil or between truth and falsehood) ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்துக்கொள்வது ஸாத்யமல்ல. (ஸத்யாந்ருதே மிதுநீக்ருத்ய) என்பது க்ஷேமம் தராது.

(தொடரும்.)

சரபேந்திரர் வைத்ய முறைகள். (குன்மரோக சிகித்சை)

பதிப்பாசிரியர்கள்; ஸ்ரீ K. வாஸுதேவ சாஸ்திரி, B. A. ஆராய்ச்சி ஆசிரியர், ஸரஸ்வதிமஹால். Dr. S. வெங்கட்டராஜன், L. I. M. (Regd) ஆயுர்வேதபண்டிதர், ஸரஸ்வதிமஹால், தஞ்சை. தஞ்சை ஸரஸ்வதிமஹால் நிர்வாகக்கமிட்டி கௌரவ காரியதரிசி ஸ்ரீ S. கோபாலன், B. A. B. L. அவர்களால் வெளியிடப்பட்டது.

விலை சாதாபைண்டு ரூ 3-8-0, முழுகாலிகோ ரூ 4-0-0

தஞ்சை ஸரஸ்வதிமஹால் இவ்வுலகிலேயே மிகச்சிறந்த ஓர் நூல் நிலையம். இதில் பெரும்பாலும் நம்நாட்டுக்கலை அனைவற்றையும் தழுவிய பல அரிய நூல்கள் ஏட்டுச்சுவடிகளிலும், காகிதத்திலும் எழுதிவைக்கப் பட்டிருக்கின்றன. நமது சுதந்திர இந்தியாவில் தேசபுனருத்தாரணத்திற்கு செய்யவேண்டிய காரியங்களுள், இதைப்போன்ற நூல் நிலயங்களிலுள்ள அரிய பொக்கிஷங்களை வெளியிட்டு நம்மக்களுக்கு நம்நாட்டுச் சிறந்த கலைகளில் அறிவை புகட்டுவதே மிக முக்கியமானது. இந்நோக்கத்துடன் ஸரஸ்வதிமஹால் நிர்வாக கமிட்டியார் இந்த உயர்ந்த நூலை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது.

இந்நூலில் குன்மரோகத்தைக் கண்டிக்கும் 134 மருந்துக்களைச் செய்யும் முறையைக்கூறும் தமிழ் பாடல்களும், அவற்றின் பொருளும், அடங்கி யுள்ளன. இம்முறை எல்லாம் பலநாட்டு வைத்தியர்களால் அனுபவ சித்தம் என அங்கீகரிக்கப்பட்ட பிறகு தஞ்சை சரபோஜிமன்னரால் தமிழ்ப்புலவர்களைக் கொண்டு எளிய தமிழ் நடையில் தொகுக்கச்செய்யப் பட்டவை. ஆகவே இந்நூலை ஆதாரமாகக் கொண்டு யாரும் நிர்பயமாக மருந்தைச் செய்யலாம். மருந்தை செய்வதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இதில் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

இதற்கு ஸ்ரீ K. வாசுதேவசாஸ்திரி யவர்களால் Dr. S. வெங்கட்ட ராஜன் L. I. M. உதவியைக் கொண்டு 118 பக்கங்களில் அரியதோர் முகவுரை ஒன்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதில் வைத்திய சாஸ்திர சம்மந்தமான பல முக்கிய விஷயங்களை தக்க ஆதாரங்களுடன் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார். இதில் ஆங்கில ஆயுர்வேத, சித்த வைத்தியர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்களும் அவசியம் கற்கவேண்டிய பல அம்சங்கள் உள. ஆகவே இதைமட்டும் தனிப்புத்தகமாக வெளியிட்டாலும் மிக்க பயன்தரும் என நாம் கருதுகிறோம்.

இந்நூலில், அனுபந்தம் 1 குணபாடம், அனுபந்தம் 2 சரக்கு சுத்தி முறைகள், அனுபந்தம் 3 சரக்குகளின் பெயராதி, ஆக இம் மூன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புத்தகம் நல்லகாகிதத்தில் மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய ஓர் அரிய நூல்.

இப்புத்தகம் ஸரஸ்வதிமஹாலின் 2-வது வெளியீடு. இது தமிழர்களுக்கு மட்டுந்தான் உபயோகப்படும். இதைப்போல் பல ஸம்ஸ்கிருத நூல்கள் இப்புத்தகாலயத்தில் இருக்கின்றன. ஸம்ஸ்கிருதத்திற்கே இது பெயர்பெற்றது. இதில் 35000 கையால் எழுதப்பட்ட பிரதிகள் இருக்கின்றதாகவும், அவற்றுள் சுமார் 2000 நூல்கள் உலகில் வேறு எவ்விடத்திலும் இல்லை யென்றும் கூறப்படுகிறது. அவற்றை யெல்லாம் வெளியிடுவதற்கு இது சரியான சந்தர்ப்பம். அதிருஷ்ட வசமாக நம் தலைவர்கள் அனைவரும் ஸம்ஸ்கிருதத்தின் பெருமையை அடிக்கடி மக்களுக்கு தற்காலம் எடுத்துரைத்து வருகின்றார்கள். நமது டொமினியன் பிரதமமந்திரி ஜவஹர்லால் அவர்கள் ஸம்ஸ்கிருதத்தைப்பற்றி எழுதியிருக்கும் அரியதோர் வியாசத்தை நேயர்கள் இவ்விதழில் வேறிடத்தில்காணலாம். அதில் "ஆராய்ச்சிகள் நடத்தி அநேகமாய் மறந்துபோய் கிடக்கும் இந்த பாஷையில் புதைந்து கிடக்கும் இலக்கியச் செல்வங்களை யெல்லாம் வெளிப்படுத்தும் வேலையில் நம்முடைய பண்டிதர்களை ஈடுபடுத்த நான் விரும்புகிறேன்" எனக் கூறி யுள்ளார். அவ்விதம் ஈடுபடும் பண்டிதர்கள் வேலை செய்ய வேண்டிய ஸ்தானங்களுள் முதல் ஸ்தானம் இந்த ஸரஸ்வதி மஹாலுக்குத்தான். இவ் விஷயத்தை பரிசீலனை செய்து ஸரஸ்வதிமஹால் நிர்வாகக் கமிட்டியார் இதற்காக மாகாணசர்க்காரிடமும், மத்யசர்க்காரிடமும் போதிய உதவியை பெற தாமதமின்றி தீவிர முயற்சியை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். இவ்விஷயத்தில் கலா[illegible] ஆஸ்திகர்களுமான பொது ஜனங்களும் உதவியைப் பு[illegible]கின்றோம்.

199834
m 2173/1947

"ஹிதபாஷிணீ" வெளியீடு நெ. 2

1 தாரித்ர்யதுக்க தஹநாஷ்டகம்.
2 மஹாமாயாஷ்டகம்.
3 ஸப்ஸ்கிருதா.

இம்மூன்றும் இவ்விரண்டாவது வெளியீட்டில் அடங்கியுள்ளன. நாகரலிபியில் மூலமும் தமிழ் உரையுமுள்ளது. வறுமைப்பிணி நீக்கி, ஸ்ரீ மாரியம்மனின் அருளைப்பெற இவை மிக முக்கியமான ஸ்தோத்திரங்கள்.

விலை அணா 4. தபாற்செலவு தனி.

முக்கிய அறிவிப்பு

நமது ஹிதபாஷிணி இரண்டாவது தொகுதி ஸர்வதாரி ஐப்பசி (நவம்பர் 1948) முதல் ஆரம்பம். அதுமுதல் அக்டோபர் 1949 வரை எந்தமாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் ஆரம்பம் முதலே கணக்கு வைத்துக்கொள்ளப்படும். பலவிஷயங்கள் தொடர்ச்சியாக வருவதால், மத்தியில் சந்தாதாரர்களாகச்சேர்ந்த பலர், ஆரம்பம் முதல் பத்திரிகை வேண்டுமெனப்பின்பு விரும்புகின்றார்கள். அக்காலத்தில் அவர்களுடைய விருப்பத்தை பூர்த்திசெய்ய முடியவில்லை. ஆதலால் இவ்விதம் நிர்மானித்திருக்கிறோம்.

ஹிதபாஷிணீ முதல் தொகுதி.

தற்காலம் முதற்தொகுதியில் எட்டு பகுதிகளே கை வசமிருக்கின்றன. அவற்றில், தர்மசாஸ்திரம், புராணம், இதிஹாஸம், ஜ்யோதிஷம், வைத்தியம், அர்த்தசாஸ்திரம், வேதாந்தம், ஸங்கீதம், காவ்யம், இவற்றைத்தழுவிய கட்டுரைகளும் ஆஸ்திக்யத்தை வளர்க்கும் இதர பொதுவிஷயங்களும் அடங்கியுள்ளன. தமிழ் உரையுடன் சில ஸ்தோத்திரங்களும், ஸம்ஸ்கிருத ஸம்பாஷணைகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

எட்டு இதழ்களும் சேர்ந்து	ரூ.	2—0—0.
தபாற்செலவு	,,	0—4—0.
தனி இதழ் 1	அணா.	0—5—0.

ஆசிரியர்: **"ஹிதபாஷிணீ"**
1835/3, மேலவீதி, தஞ்சை.

Printed by V. S. Rajagopalan, at The Mannargudi Press Ltd. 1, Kasukkarachetty Street, Mannargudi.
Edited & Published by R. Muthukrishna Sastrigal, 1835/3, West Main Street, Tanjore.

உங்கள் தேவைக்கு

நம்பிக்கையும்
நாணயமும் உள்ள
எங்கள் கடை
1812-ல்
ஸ்தாபிக்கப்பட்டது.

தகுதியான இடம்:—

B. S. ஜோஷி & பிரதர்ஸ்

மேலராஜவீதி, தஞ்சாவூர்.

உயர்ந்தரக பட்டு, நூல், ஜவுளி சாமான்களை ஸ்டாக் செய்திருக்கிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
... 949
MADRAS

Wrapper printed at the Crossword Press, Chidambaram.